இலவச மின் இதழ் வெளியீடு ~ இலங்கை

# இரவி

## கலை இலக்கிய காலாண்டுக் கதிர்



**ஈழத்தின் தலை சிறந்த திரைப்பட இயக்குனர் ஆனந்த ரமணனுடன் சொல்லாமலே ஒரு நேர்காணல்**

மழைக்கு முளைத்த காளான்□என்ற அந்த அடைமொழியே
பிழை என்று நான் கூறுகிறேன். ஏனென்றால் அவர்கள் முயற்சி
செய்கிறார்கள். குழந்தை நடக்க ஆரம்பிக்கும்போது
பலதடவை விழும். நாங்கள் அந்தக் குழந்தையை பார்த்து
சிரிக்கிறோமா இல்லையே. கைகொடுத்து தூ
க்கிவிடுகிறோம்.

**- ஆனந்த ரமணன் --**

# உங்கள் கனவுக்

குறும்படம்

முழு நீளத் திரைப்படம்

ஆவணத் திரைப்படம்

இசைத்திரைப்படம்

பின்புல இசையமைப்பு

இசை அல்பம்கள்

சொந்தக் குரலில் பாட

## அனைத்தையும் நனவாக்கிக்கொள்ள

சகலவிதமான ஆலோசனைகளும்

தயாரிப்புக்கு முந்திய செயற்பாடுகள் முதல்

தயாரிப்புக்கு பிந்திய செயற்பாடுகள்வரையான

அனைத்து சேவைகளுக்கும்

நாடுங்கள்

# கனவுப் பெட்டகம் மீடியா

# Dreem Box Media


**தொடர்புகளுக்கு**

dreamboxmedianetwork@gmail.com

0761174077




# இரவி

**கலை இலக்கிய**
**காலாண்டு இதழ்**

**பிரதம ஆசிரியர்: நரேஸ் நியூட்டன்**

**கதிர் 02**

**ஐப்பசி - மார்கழி 2024**

உங்கள் படைப்புகளை அனுப்ப:

**iravi.magazine@gmail.com**

உதவி ஆசிரியர்: அரவிந்தன்

இந்த இதழில் வெளியிடப்படும் சகல ஆக்கங்களுக்கும் அதனை எழுதியவர்களே பொறுப்புடையவர்களாவர்.

சகல ஆக்கங்களும் பாமினி யுனிக்கோட் எழுத்துருவில் தட்டச்சு செய்யப்பட்டு மென் பிரதியாக மின் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். தங்கள் பெயர் முகவரி மற்றும் புகைப்படம் ஆக்கத்துடன் அனுப்பி வையுங்கள்

புதுக்கவிதை

மரபுக் கவிதை

கட்டுரைகள்

சிறுகதைகள்

தொடர் கதைகள்

நேர் காணல்கள்

நூல் அறிமுகம்

நூல் ஆய்வு

சிரிப்பதற்கும் சிந்திப்பதற்கமான விடையங்கள்

ஓவியங்கள் போன்றவை வரவேற்கப்படுகின்றன. எழுதி எமது மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

"இவ்விதழில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாளர்கள் என்பதை தெரியப்படுத்துகிறேன்"

## இரண்டாவது இதழை அலங்கரித்த ஆளுமைகள்


### கட்டுரைகள்





### கதைகள்





### கவிதைகள்








### குறுந்திரைப்படக் கதை



### மேடை நாடகம்



### நகைச்சுவை துளிகள்



# 'இரவி'

## இரண்டாவது கதிரின் உள்ளே....


கதிர் வீச்சு

நேர் காணல்

சொல்லாமலே ஒரு நேர்காணல் - இயக்குனர் ஆனந்த ரமணனுடன்

கட்டுரை

ஆக்குவாய் காப்பாய்

புதிய காற்றுகள் வீச ஆரம்பிக்கின்றனவா

ஈழத்தில் வெளிவந்த தமிழ்த் திரைப்படங்கள் ஒரு தேடல்

சிலோன் தியேட்டேர்ஸ் நிறுவனத்தை ஆரம்பித்தவர்

ஈழத்தின் தமிழ்த்திரைப்படங்கள் வர்த்தக ரீதியில் வெற்றிபெறாமை ஏன்?

மேடை நாடகம்

காதலில் இது புதுவகை

குறுந்திரைக்கதை

ஊமைகளின் உலகம்

குறுங்கதை

சரித்திரா

சிறுகதை

வசந்தங்கள் வரும் நேரம்

ராம், சாம், சலீம்

கவிதைகள்

இவர்களல்ல நடிகர்கள்

குருத்துக்கள் கருகுகிறது

படிப்பு உயர்த்தும் உன்னை

நிறமாற்றம்

அவள்

இனிய மொழிதலில் இணங்கிடு

புத்தக வெளியீடு

# இரவி

## கதிர் வீச்சு....1

**உ**லகம் முழுவதும் பரந்து வாழும் எம் தமிழ் உறவுகள் அனைவருக்கும் தமிழை நேசிக்கும் அனைத்து உறவுகளுக்கும் என் அன்பு வணக்கம்!

எமது சஞ்சிகை **'இரவி'**யின் முதலாவது இதழ் சிறப்பாக வெளிவந்தமை எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. முதலாவது இதழுக்கு கிடைத்த வரவேற்பிற்கும் சிறந்த பின்னூட்டங்களுக்கும் எனது உளம் நிறைந்த நன்றியை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இதே போல் தொடர்ந்து வரும் இதழ்களுக்கும் தங்கள் அனைவரதும் ஆசிகளையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன்.

முதலாவது இதழை வெளியிடுவதில் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்தோம். ஒரு மின் இதழை வெளியிடுவதிலும் இவ்வளவு சிரமம் ஏற்படும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் அத்தனைக்கும் முகம்கொடுத்து முதல் இதழை வெளியிட்டோம். முதலாவது இதிழன் வெளியீட்டின்பொருட்டு எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல் இதழிற்கு தங்களது ஆக்கங்களை அனுப்பிய அனைத்து ஆளுமைகளுக்கும் எமது நன்றிகள். தங்கள் ஆதரவை தொடர்ந்து எங்களுக்கு வழங்குவதன் மூலம் பல்வேறு விடயங்களை வாசகர்களிடத்து கொண்டு சேர்க்க முடியுமென நம்புகிறேன். ஆகவே தொடர்ந்து எம்முடன் இணைந்திருப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் தொடர்து எமது இரண்டாவது இதழ் வெளியீட்டில் தடம் பதிக்கிறோம்.

இந்த இரண்டாவது வெளியீட்டை ஈழத்தின் தமிழ் சினிமா சார்ந்த விடயங்களை முன்நிலைப்படுத்தி வெளியிடலாம் என எதிர்பார்த்து அறிவிப்பை வெளியிட்டிருந்தோம். ஆனாலும் எமது சஞ்சிகை ஆரம்ப நிலையிலிருப்பதால் இன்னமும் பல ஆளுமைகளை சென்றடைவதற்கு மேலும் காலம் எடுக்கும். ஆளுமைகள் பலரை சென்றடையும்போதுதான் அதிகப்படியான ஆளுமைகள் எம்மோடு இணைந்து கொள்ளவும் பல்வேறு வகையிலான ஆக்கங்கள் கிடைப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும். இதனால் நாம் எதிர்பார்த்த அளவுக்கு ஈழத்து சினிமா பற்றியதான ஆக்கங்கள் எமக்கு வந்து சேரவில்லை. எடுத்த எடுப்பில் சாதனைகளைப் புரிவதென்பது எட்டாக் கனிக்கு ஆசைப்படுவதுபோலத்தான். இருப்பினும் சவால்கள் எமக்கு முன் நிறையவே இருக்கும் அவற்றை எதிர்கொண்டு தடைகளை தகர்த்துக்கொண்டு முன்னேறுவதற்கு. அந்த துணிவுடன் தொடர்ந்து முன்நோக்கி நகர்கிறோம்.

கடந்த பல வருடங்களாக அனேகமாக நாற்பது வருடங்களுக்கும் மேலாக என்று எடுத்துக்கொள்ளலாம், ஈழத்தின் தமிழ் சினிமாத்துறையை நான் கவனித்துக்கொண்டேவருகிறேன். பல சினிமா கலை ஆர்வலர்களும் ஆளுமைகளும் திரைப்படங்கள், குறுந்திரைப்படங்கள் மற்றும் பாடல்களை வெளியிடுவதற்கு முடிந்தவரை முயற்சிக்கிறார்கள் தங்கள் படைப்புகளை பல சிரமங்களுக்கு முகம் கொடுத்து வெளியிடு கிறார்கள் ஆனால் ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால் முன்னேற்றம் நகரவே மாட்டேன் என்பதுபோல தென்படுகிறது. இந்த நிலைமைக்கான காரணங்களை வெளிக்கொண்டுவரவும் முன்னேற்றத்துக்கான பாதை களை அனைவரும் இனம்காணச் செய்யவும், ஏற்கனவே வெளி வந்த படைப்புகள் பற்றி அனைவரும் அறிந்துகொள்ளச் செய்யவும் அவை சார் விடயங்களை ஆவணப்படுத்தவும் இந்த வெளியீட்டை ஒரு தளமாக பயன்படுத்த நினைத்தேன் சில ஆளுமைகள் புரிந்துகொண்டு தங்கள் ஆதரவை வழங்கியிருக்கிறார்கள். அவர்களது ஆதரவோடு கிடைத்த ஆக்கங்களை வைத்துக்கொண்டு ஆரம்பப் புள்ளியை இட்டிருக்கிறேன். எதிர் காலத்தில் மேலும் பலர் இணைந்து இந்த ஆரம்பப் புள்ளிக்கு மீதிப்புள்ளிகளையிட்டு அழகிய கோலத்தை வடிவமைப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஈழத்து சினிமா வரலாறு என்பது சாதாரணமான வரலாறு கிடையாது.. இது தடம் பதிப்பதற்கு பலருடைய உழைப்பு அதிகமாகவே போடப்பட்டது என்றால் மிகையாகாது. கலை ஆர்வம் மிக்கவர்கள், சினிமா துறை யில் விருப்பம்கொண்டவர்கள், கலை இலக்கியம் முக்கியமாக மேடை நாடகம் மற்றும் அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபாடுடையவர்கள் என பலருடை பங்களிப்பிலேயே ஈழத்து தமிழ் சினிமாத்துறை முதன்

முதலில் தனது தடத்தை பதிக்கத் தொடங்கியது. என்றால் அது மிகையாகாது. இது அனைவரும் அறிந்த உண்மை. ஈழத்து தமிழ்த்திரைப்படத்துறையை வளர்ப்பதில் இன்று பல இளம் வயதினர் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதோடு முடிந்தவரை எந்தெந்த வகைகளில் ஆதரவு கொடுக்க முடியுமோ அந்தந்த வகைகளிலெல்லாம் ஈழத்து தமிழ் சினிமாத்துறை ஆர்வலர்கள் ஆதரவு கொடுப்பதே சாலச்சிறந்தது. அதன் மூலமாக எதிர்காலத்தில் எமது சினிமாத்துறையை உலகளாவிய சினிமா என்ற அந்தஸ்துக்கு எடுத்துச்செல்ல முடியும். என்பது எனது அளப்பரிய நம்பிக்கை.

சினிமாத்துறை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் வேறு பல நாடுகளிலும் அவர்களின் பொருளாதார வளர்ச்சியிலும் இளம் வயதினருக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதிலும் மிகப்பெரும் பங்களிப்பை வழங்குகிறது. உலக தரத்திற்கு எமது சினிமாத்துறையை வளர்த்தெடுப்பதானது எமது தேசத்திலும் பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பை செய்வதோடு பல ஆயிரக்கணக்கான இளையோர்க்கும் திரைப்படப் படைப்பாளர்கள், நடிகர்கள் மற்றும் ஏனைய திறன்சார் சினிமாத்துறைத் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பையும் வழங்கும் என்பது இன்னமும் பலராலும் உணரப்படாமல் உள்ளது. மிக முக்கியமாக அரசு இதன் அவசியத் தன்மையை உணர வேண்டும். அப்போதுதான் படைப்பாளர்கள் தற்போதய வளர்ச்சியடைந்த தொழில் நுட்ப ரீதியான பல விடயங்களை கற்றுக்கொண்டு அவற்றைப் பயன்படுத்தி தமது படைப்புகளை உலக தரத்திற்கு உயர்த்தி வெளியீடுகளை மேற்கொள்ள முடியும்.

முதலில் அரசு இந்த விடயத்தை உணர்ந்து உலக தரத்திலான படைப்புகளை உருவாக்கக்கூடிய அவசியமான சகலவிதமான தொழில் நுட்ப சாதனங்களையுயம் நாட்டிற்கு தருவிக்க வேண்டும். அவற்றை சரியான ஒரு திரைப்படக்கற்கைக்கூடத்தை அமைத்து அதில் பொருத்தி வெளி நாடுகளில் இருந்து சகல தரப்பிலுமான தொழில் நுட்ப வல்லுனர்களையும் தருவித்து இத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு முழுமையான தொடர் பயிற்சிகளை வழங்கவேண்டும். முடிந்தால் திரைப்படத் தயாரிப்புக்கு முந்திய செயற்பாடுகள், தயாரிப்பு செயற்பாடுகள், தயாரிப்புக்கு பிந்திய செயற்பாடுகள் போன்ற விடயங்களையும் ஏனைய படத் தொகுப்பு, கிராபிக் வடிவமைப்பு, ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு, ஒலி ஒளியமைப்பு, போன்ற அனைத்து தொழில் நுட்ப ரீதியான விடயங்களையும் பாட அலகுகளாகவோ அல்லது தனித்தனி பாட நெறிகளாகவோ உருவாக்கி பட்டய அல்லது பட்டப்படிப்புகளை உருவாக்கினால் மிகச்சிறந்த பெறுபேற்றை ஈழத் திரைப்படத்துறையில் கண்டடையமுடியும் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை..

ஈழத்தின் தமிழ் திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கு அதுமட்டும் போதாது எமது தாயகத்தில் இருக்கக்கூடிய சகல ஊடகங்களும் தங்கள் ஒத்தாசையை வழங்கி ஊக்குவிக்க முன்வரவேண்டும். இந்திய ஊடகங்கள் கலைஞர்களின் வளர்ச்சியில் செய்யும் பங்களிப்புகள் அளப்பரியவை அவர்களின் பங்களிப்பை போல அதில் ஒரு குறிப்பிட்ட சில விடயங்களையாவது எமது ஊடகங்கள் எமது கலைஞர்களின் வளர்ச்சியின்பொருட்டு செய்வதற்கு முற்பட்டால் அதுவே குறிப்பிட்ட அளவான வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும். உதாரணமாக இறக்குமதி செய்து அல்லது ஒப்பந்த அடிப்படையில் வேறு நாடுகளிலிருந்து பெறப்பட்டு இங்கே உள்ள ஊடகங்கள் ஒளிபரப்பும் தொலைக்காட்சி தொடர்களில் சிலவற்றையாவது நிறுத்தி எமது படைப்புகளை விலை கொடுத்து வாங்கி வெளியிடுவது போன்ற விடயங்களை சொல்லலாம். இந்த விடயத்தில் அரசும் தனது கொள்கைகளை அதற்கமைவாக உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்தி கலைஞர்களின் வளர்ச்சியில் தமது பங்களிப்பை செய்யுமாயின் அது இலங்கைத் தமிழ்த்திரைப்படத்துறை வளர்ச்சிக்கு கூடுதல் பலமாக அமையும்..

நான் திரைப்பட கலைஞனாக என்னை ஈடுபடுத்திக்கொள்ள ஆரம்பிக்கவில்லை ஆனால் பல கலைஞர்களை எனது பயணத்தில் சந்திக்கிறேன். அவர்கள் வளர்ச்சியின்பொருட்டு கொடுக்கும் அர்ப்பணிப்புகளை பார்த்து வியந்துபோயிருக்கிறேன். அவ்வாறு சந்திக்கும் போதெல்லாம் எனது மனதில் எழுந்து நீண்ட காலமாக உறைந்துபோயிருந்த விடயங்களையே இங்கு பதிவு செய்துள்ளேன். இது நம் தேசத்தின் சினிமாத்துறை வளர்ச்சியில் சிறிய அளவேனும் பங்களிப்பை செய்யும் என்ற ஆதங்கத்தோடு நிறைவு செய்கிறேன். மீண்டும் வேறொரு விடயத்தோடு எமது அடுத்த இதழில் சந்திப்போம்.

இவ்வண்ணம்

பிரதம ஆசிரியர்

நரேஸ்

# ஆனந்த ரமணனுடன் சொல்லாமலே ஒரு சந்திப்பு



**வணக்கம் ஆனந்த ரமணன், எப்படி சுகசேதிகள் எல்லாம்?**

வணக்கம்........ வணக்கம்....... ஓமோம் நான் நல்ல சுகமாக இருக்கிறன். நீங்கள் எப்படி சுகமாக இருக் கிறீர்களா?

**ம்... நானும் நல்ல சுகமாக இருக்கிறேன். இதற்கு முதல் அண்மையில் நான் தொடர்புகொண்டு அன்று மாலை உங்களுடன் கதைப்பதாக கூறினேன் பின்னர் நேரிலே சந்தித்துக் கதைப்போம் என்று தீர்மானித்து அன்றைக்கு எடுக்கவில்லை.**

ஆமாம்... நானும் பார்த்தேன் எடுப்பீர்கள் என்று நீஙகள் எடுக்கவில்லை பின்னர் வேறு அலுவல்களோடு எனது நேரம் செலவாகிவிட்டது.

**நான் நினைத்ததுபோல நேற்றைய தினம் திரு கோணமலைக்கு வந்தேன் இன்று காலை உங்களை நேரில் சந்திக்கலாம் என நினைக்கிறேன் உங்களுடைய வசதி எப்படி என்று கூறினால் அதற்கமைவாக எனது நேரத்தை நான் ஒதுக்கிக்கொள்ளலாம்**

ஓ.... எனக்கு நீங்கள் வருவது முற்கூட்டியே தெரியாமல் போய்விட்டதே தற்போது நான் மட்டக்களப்பில் இருக்கிறேன். வேறு ஒரு அலுவல் நிமித்தம் வந்திருக்கிறேன். மன்னிக்கவும். இப்போது என்ன செய்வது.

**ஓ அதுகும் அப்படியா? சொல்லாமலே உங்களை சந்திக்க வந்தமைக்கு மன்னிக்கவும்.. இனி என்ன செய்வது பரவாயில்லை நாங்கள் தொலை பேசியிலாவது உரையாடலாம் பரவாயீல்லையா? வேறு ஏதாவது பணிகள் இருக்கின்றனவா இப்போது? அப்படியாயின் உங்களுக்கு இயலுமான நேரம் எப்போது என்று கூறினால் அப்போது பேசலாம். நான் இன்று முழுவது வேறு எந்தப் பணியையும் திட்டமிடவில்லை.**
ஓ அப்படியா?... பரவாயில்லை நாங்கள் இன்று காலையிலேயே பேசலாம் நான் ஆயத்தமாக இருக்கிறேன்.
**(காலை 9.30க்கு பேசலாம் என்று குறுந்தகவல் மூலம் அனுப்பியிருந்தேன் அதேபோல் சரியாக 9.35ற்கு கலந்துரையாடத் தொடங்கனோம்.)**

**மீண்டும் வணக்கம் ரமணன். நான் அறிந்திருந்தேன் அண்மையில் உங்களுடைய படைப்பாகிய ஆறாம் நிலம் திரைப்படம் வெளிநாடு ஒன்றில் திரையிடப்பட்டதாக அதைப்பற்றிய உங்களுடைய கருத்துகளை எங்களுடன் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

ஓமோம் அந்தத் திரைப்படம் நோர்வேயில் அண்மையில் திரையிடப்பட்டிருந்தது. நான் தான் அதைப்பற்றி முகப்புத்தகத்தில் பகிர்ந்திருந்தேன். அங்கிருக்கக்கூடிய ஒரு நண்பர் மூலம் திரையிடப்பட்டிருந்தது. அதில் 70ற்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டிருந்தார். சிறந்த வரவேற்பும் அங்கீகாரமும் கிடைத்திருந்ததாக அவர் என்னுடன் பகிர்ந்திருந்தார்.

**அந்த வெளியீடு அங்கு வெற்றிகரமாக அமைந்திருந்ததா?**

எனது படங்கள் வெளிநாடுகளில் திரையிடப்படும்போது நான் சென்று பார்ப்பதில்லைதானே. ஆனால் சிறப்பான வரவேற்பு இருந்ததாகவும் வெற்றிகரமாக அமைந்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். அதனுடைய முழுமையான விளைவுகள் என்ன என்பது பற்றி எனக்கு முழுமையாக இன்னும் தெரியாது. ஸ்ரீலங்காவில் வெளியீடு செய்தபொழுது படித்தவர்கள் படிக்காதவர்கள் என்று அனைவரும் இரசித்துப்பார்த்து நன்றாக கவனித்து பார்த்திருந்தார்கள். பார்த்து அவர்கள் நல்ல கருத்துகளை வழங்கியிருந்தார்கள். இன்னுமொருவர் வேறு ஒரு நாட்டிலிருந்து எனது படத்தை திரையிட வேண்டுமென்று எனக்கு கோரிக்கைவிடுத்து விபரங்கள் கேட்டு அனுப்பியிருந்தார். அதற்கான விபரங்களை அனுப்பியிருக்கிறேன்.

**சரி சிறப்பு... இந்த திரைப்படத்தை எடுக்கும்போது நீங்கள் எவ்வாறான நிலைமைகளுக்கு முகம் கொடுத்துள்ளீர்கள் என்று சற்று விபரிக்கமுடியுமா?**

இல்லையில்லை என்னவென்றால் ஆரம்பத்தில் இருந்து நான் ஒரு படம் எடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். உண்மையாகவே சொல்வதாகவிருந்தால் ஏன் பொய்யை சொல்வான் உண்மையாவே நான் இதற்கான கதையை தயாரித்து பின்னர் அதற்கான நிதியை தேடவேண்டியிருந்தது. பணத்திற்கு எங்குபோவது. படம் எடுப்பதாகவிருந்தால் அதற்கான நிதி மிகவும் அவசியமானது. ஒரு போட்டியொன்றிற்கு இரண்டு தடவை கதை சொன்னேன். அவர்கள் என்னை றிஜெக்ட் பண்ணிவிட்டார்கள்.

**ஆஹா... அப்புறம்....**




றிஜெக்ட் பண்ணினா.... றிஜெக்ட் பண்ணினா... நான் பிறகு கதை சொல்வதில்லை. பின்னர் அவர்கள் என்னை இன்னொரு சந்தர்ப்பத்தில் வீதியில் கண்டபோது ஏன்னப்பா நீ நல்ல கதையொன்று சொன்னாய் ஏன் மிகுதி கதையை சொல்ல வரவில்லை என்று கேட்டார்கள். பின்னர் நான் மீண்டும் சென்று கதையை கூறினேன். பின்னர் எனக்கு பணம் தந்தார்கள் அந்தப் பணத்தில்தான் 'ரிக்கட் ப்ளீஸ்' படத்தை எடுத்தேன். எடுத்து அதை ஐ. பி. சி. தமிழ் குறும்படப் போட்டிக்காக அனுப்பினேன். அதை அனுப்பினால் அங்கு 43 பேர்களுக்குள் எப்படி தெரிவா-குமா என்று யோசித்துக்கொண்டிருந்தேன். இது யுகேயில் நடந்தது. தங்கைதான் நிகழ்வுக்கு சென்றிருந்தார். சிறப்பான படங்களில் ஒன்றாக எனது படம் தெரிவாகி இருந்தது. ஆரம்பத்தில் இருந்து சினிமா செய்யவேண்டும் சினிமா செய்ய வேண்டும் என்று இருந்த எனக்கு எப்பிடி இருக்கும். அது ஒரு மகிழ்சியான செய்தியாகவும் அநுபவமாகவும் இருந்தது. அவர்கள் படம் செய்யலாம் என்று அறிவித்தமை மிக்க மகிழ்சியை தந்ததாயினும் பின்னர் அது கிடைச்சிருக்ககூடாது என்பது போன்ற உணர்வு ஏற்பட்டது

**ஓ... அது எதற்கு...**

இல்லை... ஏனென்று சொன்னால்... நாங்கள் எவ்வளவே கஸ்ரப்பட்டு முதலில் ஒரு கதைக்கருவை உருவாக்கி 6 மாதங்களுக்கும் மேலான காலத்தை செலவிட்டுத்தான் வேலைசெய்து பணமே வாங்காமல் கையில் உள்ள பணத்தை செலவிட்டுதான் ஒரு கதையை தயாரிக்கிறோம். அவர்கள் எங்கள் கதைக் கருவை ஏற்றுக்கொண்டதாக அறிவித்த பின்னர்தான் இதை செய்யத்தொங்குகிறோம். அப்போது நாங்கள் ஒரு தொழில் நிலைக் கலைஞர்களாக உருவாகலாம் பணம் ஒரு குறிப்பிட்ட தொகை கிடைக்கிறதே என்ற நம்பிக்கையோடு ஆரம்பிக்கிறோம்.

**ஆமாம்... சொல்வது சரிதான் பிறகு**

நான் பாரதிராஜாவிடமோ... மிஸ்கினிடமோ அல்லது பாலு மகேந்திராவிடமே வேலை செய்து அதன்

பின்னர் சுயமாக திரைப்படம் தயாரிக்க சினிமாத் துறைக்குள் வந்திருந்தால் பரவாயில்லை. அப்போது தெரியும் அடி வாங்கியிருப்போம் திட்டு வாங்கியிருப்போம் அநுபவம் நிறைய கிடைத்திருக்கும். தெரியும்தானே 16 வயதிலிருந்து மக்களுக்காக நாட்டுக்காக எதையயாவது செய்யவேண்டும் என்று புறப்பட்டதால் வந்த வினை. இதெல்லாம் செய்ய கூடாது என்றுதான் நினைக்கிறோம் ஆனாலும் அது மனம் விடாது திரும்பவும் செய்யதொடங்கிவிடுவோம்.

**ஆம்... ஆம்... உண்மைதான் உணர்வுபூர்வமாக மக்களுக்காக சமூகத்துக்காக எதையாவது செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள் நிலை அதுதான். அதற்குள் நுழைந்துவிட்டாலே அப்படித்தான் அதிலிருந்து அவர்கள் விடுபட வேண்டும் என்று நினைத்தாலும் வெளியே வரமுடியாது மீண்டும் மீண்டும் அதில் ஈடுபடவே செய்வார்கள். சரி நீங்கள் தொடருங்கள் ரமணன்...**

ம்.. அதுக்கு பிறகு அவர்களோடு கதையை காண்பித்து பேசியபின் அவர்களிடமிருந்து காசு வந்தால் லொக்கேசன் எல்லாம் பார்த்து கதையின்படி சூட்பண்ணி படத்தை எடுத்தாகிவிட்டது. எடுத்தால் தெரியும்தானே ஹீரோ... கமாராவிற்கு 26 இலட்சம் சாப்பாடு அது இது என்று தெரியும்தானே பல செலவுகள் எல்லாம் கொடுத்து முடித்தாயிற்று. முடித்தால் முக்கியமாக வேலை செய்த என்னுடைய நண்பர்கள் சிலருக்கு கொடுக்க பணம் இல்லை. அதனால் பின்னர் ரமணன் காசு தராமல் விட்டிட்டான், காசு செலவழித்து முடித்துவிட்டான், ரமணனோடு வேலை செய்தால் இப்பிடித்தான் அப்படித்தான் என்று வேறு இடங்களில் என்னைப்பற்றி பேசினதெல்லாம் பிறகு தெரிய வந்தபோதுதான் வருத்தமாக இருந்தது. என்னோடு யாரும் நேரடியாக கதைக்கவில்லை வேறு நண்பர்களோடு கதைத்து அவர்கள் மூலமாகதான் எனக்கு தெரிய வந்தது. ஆனால் உண்மையான என்னுடைய நிலை எனக்கு மட்டும்தான் தெரியும்.

**ஆஹா.. ஒரு படைப்புக்குபின்னால் இவ்வளவு இருக்கிறதா... சொல்லுங்கள்**

ஆமாம்... அனைத்து தயாரிப்பு வேலைகளும் முடிவடைந்த பின்னர் வெளியிடுவதில் பிரச்சனை இருந்தது. இது ஈழ விடுதலை போராட்டத் தோடு தொடர்புடைய படமாகையால் இந்த பிரச்சனை. இதனால் வேறு ஒரு தயாரிப்பாளரை உள்வாங்க வேண்டிய தேவை உருவாகியது. அவரை உள்வாங்கியதால் அவரது பெயரையும் வெளியீட்டாளர் என்று திரைப்படத்தில் சோர்க்க வேண்டியிருந்தது. இது ஏற்கனவே நிதி வழங்கிய வெளியீட்டாளருக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. இறுதியில் வெளியீட்டுக்கு முன்னரே படத்தை வெளியீடு செய்ததோடு யூரியூப்பிலும் பதிவேற்றம் செய்து விட்டார் ஒரு பகுதியினர். இந்த செயற்பாடு எமது திரையிடலுக்கு பெரிய சவாலாக அமைந்தது. இது யாருடையவும் பிழையில்லை ஒரு நிறு வனம் பணம் கொடுத்தது, மற்றவர் வெளியீட்டின் பொருட்டு எம்மோடு வேலை செய்தவர். முடிந்தவரை முயன்றும் படத்தை யூரியூப் பிலிருந்து அகற்ற வைக்க முடியவில்லை.



**ம்... அவ்வளவுதானா இன்னும் இருக்கிறதா. நான் எங்கோ ஒரு இடத்தில் உங்கள் பதிவை பார்த்த நினைவு இருக்கிறது மன்னாரோ ஏதோ ஒரு இடத்தில் வெளியிட ஆயத்தமாகி பின்னர் வெளியிட முடியாமல்போனதென்று அதுபற்றி ஏதாவது...**

ஓமோம் அப்படியெல்லாம் இருந்தது. அப்படியெல்லாம் நிறைய பிரச்சனைகள் இருந்தது. திரையரங்கில் வெளியிட திகதி குறிப்பிட்டு ஆயத்தமாகியபோது அதற்கும் பல தடைகள் வந்தது. பின்னர் வெளியீட்டு திகதியிலும் மாற்றம் செய்யவேண்டியிருந்தது. கணிசமான பார்வையாளர்கள் பார்வையிட்டு சிறந்த பின்னூட் டங்களை வழங்கியிருந்தார்கள். இப்படி பல பிரச்சனைகள். திரைப்படம் எடுப்பதில் பல ஆபத்துகள் இருக்கிறது. ஆபத்துகளை முகம் கொடுக்காவிட்டால் கலைஞனாக இருக்க முடியாது.

**திரைப்படத் துறையை உங்கள் தொழிலாக உருவாக்கிவிட்டீர்களா? இது தங்கள் முழு நேர செயற்பாடா?**

ஓமோம் முழு நேரம், முழுநேரமாகவே எடுத்துக்கொண்டேன்.

**எப்படி இதுக்குள்ள வந்த நீங்கள்.**

சாதாரணமாகவே நான் ஒரு நாடக கலைஞன் பாடசாலைகளிலும் நாடகங்களில் ஆர்வத்துடன் ஈடுபட்டவன். நாடகங்களில் இருந்த அனுபவத்துடன் திரைக்கதை எழுதுவதில் ஈடுபட தொடங்கினேன். அப்படித்தான் இதற்குள் நுழைந்தேன். அத்தோடு நான் ஒரு அழகுக்கலை நிபுணர். திருகோணமலையில் ஆரம்பத்தில் 99ஆம் ஆண்டிலிருந்து ஒரு அழகுக்கலை நிலையத்தையும் நடாத்தி வந்தேன். இருபத்தொரு வருடங்கள் நடாத்தி வந்திருக்கிறேன். எனது நிலையம் அந்த நேரம் மிகவும் பிரபல்யமானதாக இருந்தது.

**அழகுக்கலை சார்பான கற்கையை முடித்திருக்கிறீர்களா?**

ஓமோம்... முடித்திருக்கிறேன். றம்சியோடு வேலை செய்திருக்கிறேன் இலங்கையில் றம்சி ஒரு பிரபல்யமான அழகுக்கலை நிபுணர். யாழ்பாணம் மற்றும் மட்டக்களப்பு போன்ற இடங்களில் பெரிய பெரிய அழவிலான அழகுக்கலை காட்சிகளையும் (பாசன் சோ) நடாத்தியிருக்கிறேன். யாழ்ப்பாணத்தில்தான் அதிகம். என்சார்பான கட்டுரைகள் (ஆட்டிக்கல்ஸ்) எல்லாம் நிறைய வந்திருக்கிறது. அழகுக்கலையுடன் தொடர்பான பல வகுப்புகளையும் நடாத்தியிருக்கிறேன்.

**நிறைய விடயங்களை பகிர்ந்துகொண்டீர்கள் உங்களை பற்றியதான பின்புலத்தகவல்கள் பற்றியும் பகிர்ந்துகொள்ளலாமே.**



நான் பிறந்தது திருகோணமலையில். எனது ஆரம்பக் கல்வியை திருகோணமலை சூசையப்பர் கல்லூரியில் கற்றேன். பின்னர் மன்னார் சென்று அங்கு புனித சவேரியார் கல்லூரியில் அடுத்த கட்ட கல்வியைத் தொடர்ந்தேன். திருமணமாகி நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். இரண்டு ஆண் பிள்ளைகள் இரண்டு பெண்பிள்ளைகள். அனைவரும் தற்போது கல்வி கற்றுக்கொண்டிருக்கிறார்கள். தற்போது திருகோணமலையில்தான் வசிக்கிறோம்.

**சிறப்பு சிறப்பு நான் இன்னொரு விடயத்தையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன். பலரிடமும் இதைப்பற்றி தெரிந்துகொள்ள முயற்சித்தேன் ஆனால் திருப்திகரமான பதிலை யாரும் தந்ததாக தெரியவில்லை. அதாவது இலங்கையில் நான் உங்கள் தோழன் முதற்கொண்டு பல தமிழ்த்திரைப்படங்கள் வெளிவந்திருக்கின்றன. இவற்றுள் ஒருசில படங்கள் வெற்றி பெற்றதாக குறிப்பிடப்பட்டாலும். தமிழ் திரைப்படங்கள் இங்கு வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளதா? வெற்றிபெற முடியாமல் இருப்பதற்கு ஏதாவது காரணங்கள் உள்ளதா? உங்களால் அடையாளம் காணப்பட்ட காரணங்கள் ஏதாவது கூறமுடியுமா?**

ஒவ்வொரு படத்தையும் மேம்படுத்தல் (புறமோட்) செய்து ஓட வைக்க வேண்டும். அவர்களுக்கு தங்களை விற்கத்தெரியவேண்டும். புத்தாக்கத் திறன்களை பயன்படுத்தி புறமோட் பண்ணவேண்டும். எனது படத்திற்கு பின்னர் நவயுகா போன்றவர்கள் தொடர்ந்து பேசப்படுகிறார்கள் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். தமிழ் மக்கள் தமிழ் தேசியம் என்றெல்லாம் பேசுபவர்களும் இதைப் புறமோட் பண்ணி கொஞ்சம் வேலை செய்ய வேண்டும்.

நோர்வேயில் எனது நண்பர் எனக்காக, உண்மையில் எனது கையில் பணம் இல்லை, நிறைய பிரச்சனைகள் முகம்கொடுத்திருக்கிறேன, இந்த நிலையில் றமணா நீ கஸ்ரப்பட்டனி இப்ப கஸ்ரப்படுகிறாய் உன்னுடைய படம் ஓடவேண்டும் எப்படியாவது மக்களைச் சென்றடையவேண்டும் என்று சொல்லி முயற்சித்து வெளியிட்டார்கள்.

**சிலர் கோடிக்கணக்கில் முதலீடு செய்து படம் எடுக்கவேண்டும் என முயற்சிக்கிறார்களே... அவ்வளவு வருமானத்தை இங்கு தேட முடியுமா?**

இல்லையில்லை அது பிரச்சனையில்லை... நாங்கள் முதலில் நல்ல படம் எடுக்க தெரிய வேண்டும். நல்ல கதையை தெரிவு செய்ய வேண்டும். இந்தியாவில் சிலர் எமது படைப்புகளை குறைவாகவே மதிப்பிடுகிறார்கள். நான் அவர்களிடம் கூறியது நீங்கள் யாழ்பாணத்தில் வந்து வெளிவரும் ஆறாம் நிலம் போன்ற நல்ல படத்தை பார்த்தீர்களாக என்பதே. சொல்வதாக இருந்தால் இந்தியாவுடன் ஒப்பிடுகையில் 100 வீதம் இல்லாவிட்டாலும் 40 வீதம் வரையாவது சிறப்பாகவே எமது படங்கள் இருப்பதைப் பார்க்கலாம் 40 வீதம் என்பதே பெரிய வெற்றிதானே.

**அங்கே எமது படங்கள் ஓடக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா?**

ஓடலாம் ஓடலாம் வாய்ப்பு இருக்கிறது. இப்போதும் என்னுடைய படத்தை யூடியூப்பில் இருந்து தூக்கினால் என்னால் ஓடவைக்க முடியும். நான் என்னுடைய திறனை அந்தப்படத்தில் நிரூபித்துக் காட்டியிருக்கிறேன். நான் யாரையும் நம்பி இல்லையே என்னை நம்பிதானே எடுத்தேன். எனது அடுத்த படத்தில் இதை நிரூபிப்பேன். அதற்கேற்றாற்போல் கடவுளும் எமக்கு தேவையானவற்றை தந்துகொண்டிருப்பார்.

**இந்த கருத்தின் படி இலங்கையில் மட்டுமல்ல வெளியிலும் சென்று படங்களை வெளியிட்டால்தான் வர்த்தக ரீதியில் வெற்றி பெறமுடியும் என்று எடுத்துக்கொள்ளலாமா?**

இல்லை... இல்லை... அப்படியென்று இல்லை. ஒரு நல்ல படத்தை எடுத்தால் வெற்றிபெறலாம் என்பதே எனது கருத்து. நல்ல படம் எடுத்தால் நன்றாக ஓடும். இங்கு பலருக்கு நல்ல படம் எடுக்க இன்னும் தெரியவில்லை. நான் எடுத்த படத்தை உங்களுடைய மகன் பார்க்க வேண்டும் என்றில்லை. காரணம் அவர் எனது பார்வையாளர் இல்லை. அது பரம்பரை பரம்பரையாக உள்ளது. இன்னும் ஐம்பது வருடத்தில் அது இன்னும் வேறு விதமாக இருக்கும். அந்தக் காலங்களில் வந்த படங்கள் போல் இந்தக்காலத்து படங்களை நாங்கள் நல்ல ஒரு கலை நயம் நிறைந்த படம் வந்திருக்கிறது என்று கதைக்கிறோமா? இல்லை அந்த காலம் முடிஞ்சுபோச்சு இப்போ வேற ட்றெண்ட். வேறு விதமாகவே படங்களை பார்வையாளர்கள் எதிர் பார்க்கிறார்கள். இப்போ ஸ்பைடர்மான், சுப்பர் மான், கிங்கொங் மாதிரி எல்லாம் வேறுவிதமான ட்ரெண்டில் படங்கள் வந்து ஓடிக்கொண்டு இருக்கின்றன. உலகம் எங்கோ



போய்கொண்டிருக்கும்போது நாங்க எங்கோ பழைய ட்ரெண்டில் இருக்க முடியாதுதானே. நாங்கள் ஆறாம் நிலம் ஐந்தாம் நிலம் என்று கதைத்துக்கொண்டிருந்தால் சனம் பாக்காதையா. நான் இப்போ எடுக்கும் படம் கிட்டத்தட்ட அதை சரிபண்ணும். எனக்கு தற்போது ஓடியன்ஸ் யார் என்று தெரியும். அவர்களுக்கு என்ன கொடுக்க வேண்டும் எப்படிக்கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் தற்போது தெரிந்துகொண்டிருக்கிறேன். அடுத்த படம் ஒரு பன்டாசி படமாகதான் இருக்கும். அதன் மூலம் எங்களால் நிரூபிக்க முடியும். இரண்டு கரக்டர் மூன்று கரக்டரை வைத்து ஓடவைத்துவிட்டோம் என்றால் சரியாகிவிடும்.

அரசர்கள் ஏன் சிறந்த புலவர்களை அழைத்து தங்களோடு வைத்திருந்தார்கள். அவர்களுக்கு தெரியாதா

கலைத்துவிடுவதற்கு. தற்போது தாங்கள் செலிபிரிட்டி என்று நினைத்துக்கொண்டல்லவா கலைஞர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கலைஞர்களை அழைத்து வந்து அவர்களுக்கு தேவையான விடயங்களை முழுமைப்படுத்த வேண்டும். கலைஞர்களை கௌரவிக்கவேண்டும். அதை செய்யாமல் நாட்டில் கலைத் துறையை வளர்க்க முடியாது.

**இன்னுமொரு விடையம் என்னவென்றால் தற்போது மழைக்கு முளைத்த காளான் போல் பலபேர் அங்குமிங்குமாக திரைப்படம் எடுக்க முயற்சிக்கிறார்கள் புதுப்புது இயக்குனர்களும் உருவாகி வருகிறார்கள் அல்லவா அதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

'மழைக்கு முளைத்த காளான்' என்ற அந்த அடைமொழியே பிழை என்று நான் கூறுகிறேன். ஏனென்றால் அவர்கள் முயற்சி செய்கிறார்கள். குழந்தை நடக்க ஆரம்பிக்கும்போது பலதடவை விழும். நாங்கள் அந்தக் குழந்தையை பார்த்து சிரிக்கிறோமா இல்லையே. கைகொடுத்து தூக்கிவிடுகிறோம். அப்படித்தான் நாங்கள் செய்வேண்டுமே தவிர ஒதுக்கிவிடமுடியாது. இது வந்து எல்லோரும் செய்கிறார்கள். அம்மாவுக்கு வாழ்த்து சொல்ல நினைக்கும் ஒரு பெடியன் ஒரு ஆவணப்படம்போல் அதை உருவாக்குகிறான். அவர்களை நாங்கள் ஊக்குவிக்கவேண்டும். எல்லோரும் முயற்சி செய்கிறார்கள். என்னைவிட படம் செய்கிற ஐந்துபேரை எனக்குத் தெரியும். இந்தியாவில் படித்திருக்கிறார்கள் சிலர். அவர்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியவிதத்தில் கற்றுக்கொண்ட விடயங்களையும் பயன்படுத்தி சிறந்த படத்தை எடுக்க முயற்சிக்கவேண்டும். முயற்சித்துவிட்டு நான்தான் சிறந்தவன் என்று சொல்லிக்கொண்டு திரிவதையும் அங்கும் இங்கும் ஏனையவர்களைப்பற்றி கதைத்துக்கொண்டு திரிவதையும் விடுத்து தங்கள் படைப்புகளில் கவனத்தை செலுத்துவதுதே சிறந்தது.

**சிலர் ஏனையவர்களுடைய பின்னூட்டங்களை உள்வாங்குவதில்லையே அதுபற்றி உங்கள் அபிப்பிராயம்.**

ஓமோம் அது கலைஞனுக்கு வராது. ஆனால் சுய விமர்சனம் மிக அவசியமானது. நானே எனது படத்தை விமர்சிக்க வேண்டும். அப்போதுதான் எனது பிழை என்னவென்று எனக்கு தெரியும். அதே பிழையை அடுத்த படத்தில் நான் விடமாட்டேன். அநேகமானவர்கள் விரும்புவதில்லை பின்னூட்டங்களை கணக்கெடுக்கவும் மாட்டார்கள். அதெல்லாம் பிழை. நான்கூட சில சந்தர்ப்பங்களில் அப்படி யிருந்திருக்கிறேன். என்ன செய்வது கலைஞன் என்றால் அப்படித்தான்.

**இலங்கைத் தமிழ்த் திரைப்படத்துறையின் வளாச்சிக்கு என்ன செய்யலாம் என்பது பற்றிய உங்கள் அபிப்பிராயம்.**

தமிழ் சினிமா பாடசாலை (ஸ்கூல்) ஒன்றை ஆயத்தப்படுத்த வேண்டும். கலைஞர்களை நன்கு பழக்க வேண்டும். திரைக்கதையை சிறப்பாக எழுதப்பழக்க வேண்டும். திரைக்கதையை சிறப்பாக எழுதப் பழக்கினால் எந்த புகைப்படக் கருவியிலும் அதை படமாக்கமுடியும். ஒரு வரிக்கதை எழுதுவது. ஒருவரிக் கதை எழுதுவதென்பது மிகக் கடினமான விடையம். கதைக் கருவை எப்படிக் கண்டுபிடிப்பது என்பது பற்றி தெளிவுபடுத்த வேண்டும். அதற்குள் திருப்பங்களை (ட்டுவிஸ்ட்) எப்படி வைக்கலாம் என்பதைப்பற்றி புரிய வைப்பது. நடிப்பை சொல்லித்தரவேண்டும் முகபாவனைகள் உட்பட (சிலவேளை புகைப்படக் கருவியை கொண்டு வந்து வைத்தபின் அவர்களது (நடிகர்களின்) எக்ஸ்பிரசன் பார்க்கும் போது பொத்துக்கொண்டு வரும்...கோபம்) சின்ன வயதில் இருந்தே படிப்பிக்க வேண்டும் அப்போதுதான் ஜெனரேசன் வளரும். நடிகைகளை நடிப்பதற்கான சூழலை உருவாக்கவேண்டும். நடிகர்கள் உருவாகவேண்டும். தமிழில் இங்கு நடிப்பதற்கு ஆட்கள் இல்லையென்றே கூறலாம். சிறப்பாக நடிக்கக்கூடிய இருவர் மூவரைத் தவிர அதிகமாக கண்டுபிடிப்பது மிகவும் கடினம். ஆகவே நடிப்பு பயிற்சியும் மிக முக்கியம். கட்டாயமாக ஒரு உள்ளக கலைக்கூடம் உருவாக்கி கற்பிக்கவேண்டும்.

**இலவசமாக யாராவது கற்பிக்க முன் வந்தால் சரியாக அமையுமா?**

அது சரிவராது. உங்களுக்கு என்ன பிரச்சனை. சிங்களத்திலே ஒரு திரைப்படக் கூடம் இருக்குமாக இருந்தால் ஏன் தமிழில் இருக்கக்கூடாது. நாங்களாக பரீட்சார்த்தமாக எடுக்கும் முயற்சிகள் வெற்றிகரமாக அமையாது. அது அரைகுறையான செயற்பாடாக அமையும். முதலில் ஒரு பாடசாலையை கட்ட வேண்டும் யாழ்ப்பாணம் அல்லது திருகோணமலையில். லைக்கா போன்ற பெரிய பெரிய நிறுவனங்கள் எல்லாம் இருக்கின்றன. 10 வருடத்துக்கு விரிவுரையாளர் வசதிகளையும் ஏற்படுத்தி தடையின்றி நடாத்தக்கூடியவாறு முதலீடு செய்து ஆரம்பித்தால் மட்டுமே இது சாத்தியமாகும். நாங்கள் மணல் வீடு

கட்ட முடியாது. நடக்காத கனவுகள் பற்றி பேசி பயனில்லை. இது தீர்க்கமான நிரந்தர மாக இயங்கக்கூடியவாறு அமைக்கப்படவேண்டும்.

**மற்றொரு கேள்வி பெரிய பெரிய முதலீட்டாளர்கள் இருக்கிறார்கள்தானே நான் அவர்கள் பெயரை குறிப்பிட விரும்பவில்லை, அவர்கள் போன்றவர்கள் எமது திரைப்படங்களில் முதலிடுவது பற்றி சிந்திப்பதில்லையே நீங்கள் இதற்கு என்ன கருத்தை கூறுகிறீர்கள்?**



இல்லையில்லை, இல்லை அவர்கள் முதலீடு செய்ய மாட்டார்கள். எப்படி முதலிடமுடியும். அவர்கள் பணம் போட்டால் அந்த பணத்துக்கான திரும்பலை எதிர்பார்ப்பார்கள். ஆகவே இங்கு முதலிட்டு பயனடையமுடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. ஆகவே முதலிட மாட்டார்கள். நாங்கள் இங்கு சிறப்பான படைப்பை உருவாக்கி அதனை வெற்றி பெறச் செய்து காட்டினால் பணம் தருவார்கள்.

ஒரு ஒழுங்கமைவான நீண்டகால இலக்குடன்தான் இதனை ஆரம்பிக்க வேண்டும். என்னிடம் போதிய அளவு கதைய-ிருக்கிறது. ஒரு கோடி கதையிருக்கிறது. அதை சரியாக கற்றுத் தெளிந்தவர்களை வைத்து சிறப்பான படைப்பாக வெளியிட வேண்டும். இதற்கேற்றாற்போல் நிலைமை உருவாகவேண்டும். எங்களுடைய போராட்ட வரலாறையே முழுவதுமாக படம் எடுக்கலாம். நாங்கள் சும்மா கதைத்துக் கொண்டு இருப்பதில் அர்த்தமில்லை. 2000 கோடி இருந்தால் தொடர்ச்சியாக சிறந்த படைப்புகளை உருவாக்கலாம். எங்களுடைய படத்தை நாங்கள்தான் செய்யவேண்டும். இந்தியாவிலேயே அதைத்தான் கூறுகிறார்கள் உங்கள் படத்தை நீங்கள்தான் செய்ய வேண்டுமென்று. நான் எதற்கும் தயார். மிஸ்கின், வெற்றிமாறன் போன்ற இந்திய இயக்குனர்களை வைத்து செய்வதாக இருந்தாலும் நான் இணை இயக்குனராக செயற்பட தயார்.

**உங்கள் படைப்புகளுக்கான விமர்சனம் எமது சஞ்சிகையில் வெளி-வரவேண்டும் என விரும்புவோர் நீங்கள் வெளியிட்ட படைப்பின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பி வையுங்கள். முன்னுரிமை அடிப்படையில் நூல்களுக்கான விமர்சனங்கள் வெளியிடப்படும். நூல்களை அனுப்ப எமது மின் அஞ்சல் முகவரியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.**

**நன்றி**



# ஆக்குவாய் காப்பாய்

## கனேடிய தமிழ்த்திரைப்படம்

- குரு அரவிந்தன் -




தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் ஒன்றான கனடாவில் தயாரிக்கப்பட்ட 'ஆக்குவாய் காப்பாய்' என்ற திரைப்படம் பற்றிய ஊடகச் சந்திப்பு சென்ற ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ரொறன்ரோ நகெட் அவென்யூவில் உள்ள பிறைமா நடனப்பள்ளி மண்டபத்தில் மாலை 7 மணியளவில் நடைபெற்றது. கனடாவில் இருந்து வெளிவரும் 'தமிழ் ஆரம்,' 'வதனம்' ஆகிய தமிழ் இதழ்களின் ஆசிரியர் என்ற வகையில் எனக்கும் அழைப்பு வந்தது. இந்தப்படம் கனடா நாட்டில் வசிக்கும் ஒரு தமிழ்ப் பெண்ணின் வாழ்க்கைப் போராட்டங்களை மையப்படுத்திய கதைக்கருவைக் கொண்டிருக்கின்றது.

லூனார் மோஸன் பிக்சர்ஸ் மற்றும் ஆர். புரொடக்ஸன்ஸ் இணைந்து தயாரித்த இந்தப் படம் கனடா எஸ். மதிவாசனின் எழுத்து, இயக்கத்தில் உருவாகி இருக்கிறது. இந்தத் தமிழ்ப்படம் செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி யோர்க் சினிமா திரையரங்கில் மதியம் ஒரு மணிக்குத் திரையிடப்பட இருக்கின்றது. இதில் கதாபாத்திரங்களாக கிருந்துஜா ஸ்ரீகாந், ஜெயப்பிரகாஸ், டேனிஸ் ராஜ், செந்தில் மகாலிங்கம், மதிவாசன் சீனிவாசகம், சுரபி யோகநாதன், ஆஸ்லி சுரேஸ்குமார், ஆதியா தயாளன், தனிஸா, சுதர்ஸி இக்னேஸியஸ், ரிஸீத் தலீம், மார்க் டிபேக்கர், டாக்டர் கரு கந்தையா, டாக்டர் கதிர் துரைசிங்கம், டாக்டர் வரகுணன் ஆகியோரும் நடிக்கின்றனர். ஜீவன் ராம்ஜெயம் மற்றும் தீபன் ராஜலிங்கம் ஆகியோர் ஒளிப்திவு செய்திருக்கிறார்கள். ரியூ ஆர். கிருஸ்ணா இந்தப் படத்திற்கு இசை அமைத்திருக்கின்றார். மகாஜனா கல்லூரியின் பிரபல நாடக நடிகரும், வைத்திய கலாநிதியுமான கதிர் துரைசிங்கம் இந்தப் படத்தில் வைத்தியராகக் கௌரவப் பாத்திரம் ஏற்று நடித்திருக்கின்றார்.

இதன் மூலக்கதையைச் எழுத்தாளரும் நடிகருமான சகாப்தன் எழுதியிருக்கின்றார். இந்தக் கதையை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்த **'ஆக்குவாய் காப்பாய்'** என்ற நாடகம் ரொறன்ரோவில் இரண்டு தடவையும், மொன்றியலில் இரண்டு தடவையும், இலண்டனில் ஒருமுறையுமாக ஐந்து தடவைகள் மனவெளிக்கழகம் மற்றும் மகாஜனா பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றால் மேடையேற்றப்பட்டிருந்தன. மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் நாகமுத்து சாந்திநாதனின் நெறியாள்கையில், நாடகத்தில் சுமுதினி சக்திவடிவேல், தயாபரன் ஆறுமுகம், டாக்டர் கதிர்துரைசிங்கம், சகிலா தவராஜா ஆகியோர் நடித்திருந்தனர். புலம்பெயர்ந்த மண்ணில் கனடியத் தமிழர்கள் நாடகக்கலையைத் தொடர்ந்தும் தக்கவைத்திருப்பது பெருமைக்கும், பாராட்டுக்கும் உரியது.

கனடாவில் எனது **'முள்ளுவேலி'** என்ற சிறுகதையை **'வேலி'** என்ற பெயரில் மதிவாசன் தயாரித்து, நெறியாள்கை செய்த போது சிறந்த ஈழத்து நடிகரான அமரர் கே. எஸ். பாலச்சந்திரன் அதில் நடித்திருந்தார். இந்தப் படத்தின் திரைக்கதை வசனத்தை நான் எழுதியிருந்தேன். இதைத் தொடர்ந்து **'சுகம் சுகமே,' 'சிவரஞ்சனி'** போன்ற இந்திய – கனடா கூட்டுத் தயாரிப்பான படங்களுக்கும் திரைக்கதை வசனம் எழுத எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. 'சுகம் சுகமே' என்ற படத்தின் சிறந்த திரைக்கதை வசனத்திற்காக ஜனகன் பிச்சேர்ஸாரின் விருதும் கிடைத்தது. சுகம் சுகமே படத்தில் டாக்டர் கதிர் துரை சிங்கமும் நடித்திருந்தார். தமிழ்ப்படங்கள் தயாரிப்பதில் இந்தியாவுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் கனடா நாடு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# புதிய காற்றுகள் வீச ஆரம்பிக்கின்றனவா?

- பேராசிரியர் மௌனகுரு -



ஈழத்து தமிழ் சினிமா பற்றிய விடயங்கள் சார்பான பதிவுகள் பற்றிய தேடல் முனைப்பில் ஈடுபட்டிருந்தபோது எனது பார்வையில் பட்ட இந்தப்பதிவு பேராசிரியர் மௌனகுரு சின்னையா அவர்களுடையது. ஈழத்தின் இசை நாடக நாட்டிய கலையில் பல்வேறு புத்தாக்கங்களுக்கூடாக பல புரட்சிகளை உண்டாக்கிய இவர் இன்னமும் அரங்கக் கலை நிகழவுகளின் வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியிருக்கும் ஒரு மிகச் சிறந்த ஆளுமை. ஈழத்து அரங்கக் கலை வளர்ச்சியின் முக்கியமாக இசை நாடக நாட்டியத் துறையின் கிடைத்தற்கரிய பொக்கிசம். அவரது உள்ளக் கிடக்கையில் இருந்து எழுந்து அவர் எழுதிய இந்த பதிவு என்னை கவர்ந்ததால் ஏனையவர்களும் படித்து இன்புறும் பொருட்டு இங்கு பதிவு செய்கிறேன். இந்தப் பதிவுக்காக பேராசிரியருக்கு எனது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

“பேராசிரியர் ரோனி ராஜ ரத்தினம் போன்ற ஆளுமை யான பழைய பேராசிரி யர்கள் பற்றி எழுதுகிறீர்களே புதியவர்கள் யாரும் இல்லையா?” என்று ஒரு அதிரடிக் கேள் வியை என்னிடம் ஒரு நண் பர் கேட்டார்

அதற்கான பதில் குறி இந்தப் பதிவு

அண்மையிலே ஆனந்த ரம ணனின் ஆறாவது நிலம் என்னும் ஈழத்துச் சினிமாப் படம் ஒன்று மட்டக்களப்பு சாந்தி திரை அரங்கில் பார்த்தேன். அவர் என்னையும் சித்திரலேகாவையும் அதனைக் காண அழைத்திருந்தார். **மனதை மிகவும் கலக்கிய ஒரு படம் அது.** அது பற்றி தனியாக எழுத வேண்டும். போரில் ஏற்படும் மனித அவலங்களை மனதில் மிகவும் உறைக்கும்படி அது கூறியது. அதனைச் சினிமா மொழியிலே அது கூறியதுதான் எனக்கு மிகவும் பிடித்திருந்த வி‘யம்.

அது போக, நான் 2022 இல் மட்டக்களப்பு வந்திருந்த போது சினிமாவில் ஈடுபாடு கொண்ட ஒரு சிறிய குழுவைச் சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது. அது பற்றி என்முகநூலில் பதிந்ததாக ஞாபகம். தங்களது சிறிய ஸ்டுடியோக்கு அவர்கள் என்னை அழை த்துச் சென்று அவர்கள் தயாரித்த **“ரொட்டி”** என்னும் குறும்படத்தை எனக்குப் போட்டுக் காட்டினார்கள். அவர்களோடு ஒரு சிறு உரையாடலும் நடைபெற்றது

சினிமா மொழியிலே அழகாக அந்த குறும்படம் அமைந்திருந்தது. ஒவ்வொரு கலை வடிவத்திற்கு ஒவ்வொரு மொழியுண்டு. அது நாம் பேசும் மொழி அல்ல கலை மொழி. காலம் தோறும் பலர் தேடி உருவாக்கிய மொழி அது. அவர்கள் அன்று காட்டிய **ரொட்டி** எனும் குறும் படத்தில் வந்த அந்தத் தோட்டத் தொழிலாளியின் பிள்ளை யின் கண்களின் ஓர்மம் இப்போதும் என் மனதில் இருந்து போகவில்லை

அதனை எடுத்து இருந்தவர் **கிரேசியன்**. பொதுவாக இலக்கியம் பற்றியும் சினிமா பற்றியும் அவர்களோடு உரையாடிய போது, அவர்கள் தீவிர வாசிப்பும், தேடல் எண்ணமும் கொண்டவர்களாக எனக்குத் தெரிந்தார்கள். அவர்களின் தலைவராக திகழ்கிறார் இந்தக் கிரேசியன்.

யார் இவர்? இவர் இலங்கையர். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் கணினி மென்பொருளில் உயர் பட்டம் பெற்றவர். அங்கே கட்புலக்கலையையும் ஆவணப்படம் தயாரிக்கும் நுட்பங்களையும் பயின்றவர். காத்திரமான நெறியாளர்களுடன் தொடர்புகொண்ட வரும் கூட. அமைதியானவர் ஆனால் ஆழமானவர். அவரைச் சுற்றி ஒரு சிறு இளைஞர் குழாம் மட்டக்களப்பில் திரண்டுள்ளது. இவர்கள் யாவரும் மட்டக்களப்பின் பிரபல கல்லூரிகளான சென்ட் மைக்கேல் கல்லூரி, மத்திய கல்லூரி, சிசிலியா கன்ட்வென்ட், வின்சென்ட் மகளிர்கல்லூரி, இந்துக்கல்லூரி, மகாஜனாக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் கல்வி கற்ற மாணவ மாணவியர். புதிய தலைமுறைகள். கிரேசியன், வேணுப்பிரியன், அக்‘யன், சுரஞ்கன், அகல்யா, திலானி, அருண் கிஸாந், யுக சோபன், ரவி பிரசாத், திவாகர் என்போர் முக்கியமானவர்கள். இது தானாகத்திரண்ட கூட்டம்.

அவர்களுடனான உரை யாடல் எனக்கு அவர்களின் தீவிர தேடுதலைக் காட்டியது. படப்பிடிப்பையும் சினிமாவையும் முறையாகக் கற்றவரான கிரேசியன் இதுவரை பல குறும் படங் களை எடுத்தி ருக்கிறார்

அவையாவன

1.யாம்

2.பேர்த் சர்ட்டிபிக்கற்

3.ரொட்டி

4.யாதும் ஆகினால்

5.தம்பி எவடம்

6.ஆனால் நீங்க

7.அப்பா எப்ப வருவார்

8.வேண்டாம்

இவை எல்லாம் சமூகப் பிரச்சினைகளை கலை நயத்தோடு அணுகுகின்ற படங்களாகும். **யாம்** எனும் படம் இன ஒற்றுமைபேசுகிறது

1.பர்த் சர்டிபிகேட்

எனும் படம் சிங்களக் காரியாலயங்களில் தமிழர் ஒருவர் சர்டிபிகேட் எடுக்க அலையும் அவலம்பற்றியது. மொழிப் பிரச்சனை சம்பந்தமானது

2.ரொட்டி

மலையக மக்களின் பஞ்சத்தையும். இளம் சிறுமியின் ஓர்மத்தையும்பற்றியது.

3.யாதுமாகினால்

ஈஸ்டர் குண்டு தாக்குதல் பற்றியது

4.தம்பி எவடம்

திருமணத்தில் எழும் சாதிப்பிரச்சினை பற்றியது

5.ஆனால் நீங்கள்

சமூக ஊடகம் பற்றியது

6.அப்பா எப்ப வருவார்?

ஆஸ்திரேலியாவுக்குப் படகில் போகும் மக்களின் அவலம் பற்றியது. எல்லாமே இன்று நம் கண்முன் நிகழும் சமூக அவலங்கள். இன்றைய சமூகப் பிரச்சினைகள். இவை கிரேசியனின் கண்களிலும். இவர்கள் கண்களிலும் பட்டிருக்கின்றன. இதற்கான பிரதிகளை அவர்கள் கூட்டாகவே சேர்ந்து தயாரிக்கிறார்கள். தங்களுக்குள் உரையாடுகிறார்கள். ஒன்றாக உழைக்கிறார்கள். இலட்சிய வேகம் மிகுந்த இளைஞர்கள்.



முதல் மூன்று ஆவணப் படங்களும் பணப் பரிசுகள் பல பெற்றுள்ளன. அந்தப் பரிசுப் பணத்தைக் கொண்டு கிரேசியனும் அவரது நண்பர்களும் தயாரித்த முழு நீள திரைப்படம் தான் **ஒமேகா.** ஒமேகா இரண்டு பிரச்சினைகளைப் பேசுகிறது. இரண்டுமே பொதுச் சமூகத்தால் கவனிக்கப்படாத அங்கீகரிக்கப்படாத விடயங்கள். ஒன்று ஓரினச்சேர்க்கை சம்பந்தமானது, இன்னொன்று போரினால் பாதிக்கப்பட்ட உறுப்பிழந்தோர் சம்பந்தமானது. இவ்விரு கருப்பொருள்களையும் இதில் இணைத்திருக்கிறார்கள் என அறிகிறேன்.

பிரச்சனையை தாங்கள் கூறி இருப்பதாகவும், தீர்வை மக்களின் சிந்தனைக்கு விட்டுள்ளதாகவும் அவர்கள் என்னிடம் கூறினார்கள். அந்த முழு நீளப் படத்தைத் தணிக்கை குழுவுக்கு அனுப்பி அனுமதி பெற்று அதனை வெளியிட நாளும் பெற்றுள்ளார்கள்.

அதற்கான பிரிமியர் ஸோ இம்மாதம் 15ஆம் தேதி மட்டக்களப்பிலே நடந்தது. என்னையும் அழைத்து இருந்தார்கள் செல்ல முடியவில்லை. 140 பேர் அங்கு வந்திருந்தனர் என்றும் நல்ல பதில் குறிகள் கிடைத்தன என்றும் என்னிடம் கூறினார்கள். அனைவரும் கலந்துரையாடியதை எழுத்தில் வடித்தவர்கள் நால்வர் என அறிகிறேன்.

**வேணுப்பிரியன்**

**சார்ள்ஸ் கிரேஸியன்**

**சர்ச்சின்**

**திவானி**

ஒரு பெண் திரைக்கதை எழுத வருவது எத்தனை மகிழ்ச்சி. ஒளிப்பதிவு - சார்ள்ஸ் பெர்னாண்டோ. இவர்களுள் வேணுப்பிரியனை நெருக்கமாக அறிவேன். அடிக்கடி வந்து புத்தகம் பெற்றுச் செல்வார். அவரது தேடல்என்னைக் கவர்ந்தது அவரிடம் எனக்குப் பிடித்தது அவரதுபரந்த வாசிப்பு திறன்தான். மட்டக்களப்பு மக்களின் வாழ்வியலை அதன் முழுப் பரிமா ணங்களுடன் நாவல் ஆக்க வேண்டும் என்று ஆவல் உடையவர். அவருடைய அமைதியான சுபாவமும், அலட்டிக்கொள்ளாத போக்கும், அறியும் ஆர்வமும், புதியன நோக்கி போகும் போக்கும் அவர் மீது எனக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளன.

கிரேசியனும் தன்னுடைய அமைதியால் என்னைக் கவர்ந்திருக்கிறார். இந்த சினிமா படப் பிரதியை அவர்கள் அச்சில் கொணர நினைக்கிறார்கள். அந்த நூலை என்னிடமும் சித்திரலேகாவிடமும் தந்து செல்லதான் அவர்கள் எனது வீட்டுக்கு வந்திருந்தார்கள். அதற்கான ஒரு முன்னுரை எழுதும் பெரும் பாரத்தை என்மீது சுமத்திச் சென்றி ருக்கிறார்கள். அப்படியானால் மட்டக்களப்பில் இருந்து ஒரு சினிமாப் பிரதி நூலாக வரப்போகிறது என்பது அர்த்தம். நான் இன்னும் ஒமேகா படம் பார்க்கவில்லை. எழுத்துப் பிரதியை வாசித்துக் கொண்டிருக்கிறேன்.

இதை தயாரிக்க அவர்களுக்கு மூன்று வருடம் எடுத்து இருக்கிறது. 2021 கூடிக் கலந்து இதற்கான பிரதி உருவாக்கம் ஆரம்பித்திருக்கிறது. அதற்கு ஒரு வருட காலம் எடுத்து இருக்கிறது. படம் உருவாக்க ஒரு வருட காலம் எடுத்திருக்கிறது. படத்தை எடிட் பண்ணி ஒழுங்குப்படுத்தி செம்மைப்படுத்தி எடுக்க மேலும் ஒரு வருடம் எடுத்திருக்கிறது. மூன்று வருட உழைப்பின் பின் வந்த படம் இது

ஊறப் போட்டு ஊறப் போட்டு அழகுப்படுத்தி அழகு படுத்தி அவர்கள் இதை உருவாக்கி இருக்கிறார்கள். காத்திரமான வேலைகளுக்கு இத்தகைய உழைப்பு மிக மிக அவசியம்

அள்ளித் தெளித்த அவசர கோலங்கள் செய்யும் பலருக்கு மத்தியிலே இவர்கள் தனித்து தெரிகிறார்கள். இவர்களை என்னிடம் வீட்டுக்கு அழைத்து வந்தவர் எனது முன் வீட்டுக்காரரான யுகசோபன் எனும், கைக்குகுழந்தையாக அவனை நான் தொட்டிலிலே தூக்கிக்கொண்டு இருக்கிறேன். மளமளமென வளர்ந்து அவன் 22 வயதினன் ஆகிவிட்டான்

அவனுக்குள் தீவிர சினிமா பற்றிய ஒரு எண்ணம் இருப்பது எனக்கு அடியோடு தெரியாது. அவன் தான் இவர்களை என்னிடம் அழைத்து வந்தான். காத்திரமான ஒரு இளைஞர் கூட்டம் எனக்கு அறிமுகம் ஆனது

பழைய மரபிலேயே ஊறிப்போய்

பழமையை பேணுதலையே

வாழ்வின் இலட்சியம் என்று கூறித் திரிபவர் மத்தியிலே இவர்கள் வித்தியாசமாக தெரிகிறார்கள்

பாரம்பரியத்தை பேணுதல்

மரபு வழிக் கூத்து

மரபு வழி ஆடல் பாடல் என்று

பழையதே திருப்பி திருப்பி திருப்பிச் செய்தல் என்பனவற்றை உயர் கல்வி நிறுவனங்களிலும் பொது வெளியிலும் அடிக்கடி கண்டு அலுத்துப்போன மனதுக்கு, இந்த இளைஞர்களும் அவர்களின் புதியன புனையும் போக்கும் ஒத்தடம் தருகின்றது

காலத்தின் நியதி

புதியன புகும்

இந்தப்புதுப் போக்கினை அங்கு வீசும் புதிய காற்றுகளின் ஒரு பிரிவு எனக் கண்டுமகிழுவோம்

# சிறுகதை– இரஜகை நிலவன்



**பொன் அந்தி** மாலையும் தென்றல் காற்றை மெதுவாக பூமிக்கு அனுப்பி வெப்பம் குறைந்துள்ளதா என வேவுபார்த்து வர அனுப்பியது. ஆதவன் தன் வேலை நேரம் முடிந்து விட்டதென 'டாட்டா' காட்டி விட்டு பூமிக்குள் ஓடி ஒளிய முயற்சி செய்து கொண்டிருந்தது.

தன்னருகே கதிரவன் வருவதாக கற்பனை செய்து நீல வானமும்மேகக் கூட்டங்களும் செம்மை படர்ந்த கன்னத்தோடு சொக்கி நின்றது.

இன்னும் வீட்டிற்கு சரியான நேரத்தில் திரும்பி வராத மகனைத் தேடி எங்கே போவது என யோசித்துக் கொண்டிருந்தாள் உமா.

வேலைக்குப் போயிருந்த கணவனுடைய அலுவலகத்திற்கு போன் பண்ணிய 'போது அப்போதே கிளம்பி விட்டாரே ராஜன்' என்ற பதில்தான் கிடைத்தது.

இனி ராஜன் தனது நண்பர்களோடு சேர்ந்து தண்ணி அடித்து விட்டு வீட்டிற்கு வர பொழுது விடிந்து விடும். என் மகன் விக்னேஷை இப்போது எங்கே போய்த் தேடுவது?

## வசந்தங்கள் வரும் நேரம்

என உமா தவித்துக் கொண்டிருந்தாள்.

விக்னேஷ் படிக்கும் பள்ளிக்கும் அவளது நண்பர்கள் வீட்டிற்கும் போன் பண்ணி அலுத்துப் போனாள் உமா.

நான்கு மணிக்கு பள்ளி முடிந்தும் உற்சாகமாக வீட்டிற்கு ஓடி வந்து 'அம்மா' என்று கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொள்ளும் அன்பு மகன் விக்னேஷை இப்போது எங்கே போய்த் தேடுவது?

நேரம் போகப் போக அவளுக்கு பயம் வர ஆரம்பித்தது. 'அண்ணன் வீட்டிற்குப் போன் பண்ணி வின்னேஷை காண வில்லைஎன்று சொல்லலாமா? சே! ஐம்பது கிலோ மீட்டருக்கு அப்பால் தங்கி இருக்கும் அவரை இப்போது தொந்தரவு பண்ணி என் பயத்தை அவரிடமும் தொற்றிக்கொள்ளச் செய்ய வேண்டுமா? என்று அவள் மனம் எண்ணியது.

வேறு வழியும் தெரியவில்லையே கடவுளே! இந்தப் பட்டணத்தில் பக்கத்து வீட்டுக்காரர்களுடன் கூட அதிகமாகப் பழக்கமில்லாமல் போனதில் கோபமும், எரிச்சலும்தான் மேலோங்கியது உமாவிற்கு.

ராஜனிடம் சொல்லிச் சொல்லி அலுத்துப் போய் விட்டது. இந்தக் குடிப் பழக்கத்தை விட்டு விடுங்கள் என்று. ஆனால் அவனோ தினமும் குடித்து விட்டு இரவு பதினோருமணிக்குப் பிறகு வீட்டிற்கு வந்து இங்கே என்ன நடக்கிறது என்று கூட கவனிக்க முடியாமல் "சே" உங்களுக்கெல்லாம் குடும்பம் குட்டி எதற்கு? என்று கூட சண்டை போட்டு அவளுக்கு அலுத்துப் போய் விட்டது.

அழுது அழுது கன்னமெல்லாம் கண்ணீர் காய்ந்துப் போக, வேறு வழி தெரியாமல் பக்கத்து வீட்டுக் கதவைத் தட்டினாள். "அண்ணா அவர் இன்னும் வேலைக்குப் போய் விட்டு வரவில்லை. விக்னேஷ் ஸ்கூலுக்குப் போனவன் இன்னும்

திரும்பி வர வில்லை. இந்த சிட்டியிலே எனக்கு உறவு என்று சொல்லிக் கொள்ள யாருமில்லை. கொஞ்சம் அவனைத் தேடிப் பார்க்க வழி சொல்ல முடியுமா?" என்று அழுகையோடு பக்கத்து வீட்டு சுமனிடம் கேட்டாள் உமா.

"கொஞ்சம் இருங்கள் சிஸ்டர். என் நண்பர் ஒருவர் போலீஸ் ஸ்டேஷனில் வேலை செய்கிறார். அங்கே ஒரு கம்ப்ளைண்ட் கொடுத்து விடுவோம் என்றான் சுமன்.

"ஸ்டேஷனுக் கெல்லாம் போக வேண்டாம். என் விக்னேஷ் ஸ்கூலிலிருந்து வந்தவன் எப்படியோ எங்கோ வழிமாறிப்போய் விட்டான். அவனைத் தேடித்தான் பார்க்க வேண்டும். " என்று சொன்னபோது அவளுக்கு மீண்டும் அழுகை எட்டிப் பார்த்தது.

"உங்கள் விருப்பப்படி வேண்டுமானால் பள்ளிக்குச் செல்லும் வழியெல்லாம் தேடிப் பார்க்கலாம். ஆனால் என்னிடம் ஸ்கூட்டர் தானிருக்கிறது. என்னோடு இந்த இரவு வேளையிலே நீங்கள் ஸ்கூட்டரில் வரமுடியாதே"

"கொஞ்சம் ஆட்டோவிலே போய்த் தேடிப் பார்க்கலாமே"

"சரி, கொஞ்சம் இருங்கள்" என்றபடி சுமன் சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு உமாவோடு புறப்பட இருவரும் ஆட்டோவில் ஏறி பள்ளி செல்லும் வழியிலிருந்து விக்னேஷின் நண்பர்கள் வீடு என ஒவ்வொரு இடமாகத் தேடிப் பார்த்து சலித்துப் போனார்கள்.

உமா வேறு வழியின்றி முந்தானையை வாய்க்குள் வைத்துக் கொண்டு அழுகையை அடக்கிக் கொண்டே வீட்டிற்குத் திரும்பினாள்.

அங்கே கையில் காலில் சின்ன சிறாப்புக் காயங்களுடன் இரத்தம் சட்டையில் சிதறியிருக்க சீருடை முழுவதும் மண்ணாக கண் சிவந்து அழுது கொண்டிருந்த விக்னேஷைப் பார்த்ததும் ஓடி வந்து கட்டிக் கொண்டாள் உமா.

"என்னடா! கண்ணா என்னாச்சு?" என்று கேட்டபடி உமா ஓவென்று அழ ஆரம்பித்தாள். பக்கத்து வீட்டுக் காரர்கள் எல்லாம் ஓடி வந்து என்னவென்று துக்கம் விசாரிக்க முயல விக்னேஷ் திரு திருவென்று விழித்துக் கொண்டிருந்தான்.

"சிஸ்டர் நீங்கள் வீட்டிற்குப் போங்கள். விக்னேஷ் வீட்டிற்கு திரும்ப வந்து சேர்ந்து விட்டானல்லவா?" என்றான் சுமன்.

பக்கத்து வீட்டு மனிதர்களைக் கூட்டமாகப் பார்த்ததும், தயங்கி வீட்டிற்குள் நுழைந்து கதவை சாத்திக் கொண்டு "எங்கே கண்ணா போய் விட்டே?" என்றாள் அவனை அணைத்துக் கொண்டே.

"மம்மி, ஒரு காரிலே ரெண்டு பேர் என்னை இழுத்துக் கொண்டுப் போனார்கள். வீட்டிலே போனிருக்கா? என்றார்கள். இல்லைண்ணேன் உன்னை வச்சிச் சம்பாதிகப் போறேன்ணாங்க"

"எனக்கு ஒரே அழுகையா வந்துச்சு. நான் அங்கேயிருந்து தப்பிச்சு ஓடி வரும் போது நம்ம ஸ்கூலுக்கு வரும் அங்கிளோட ஆட்டோவிலே மோதிட்டேன். நல்ல காயம். அவர்தான் என்னைப் பாதுகாத்து கூட்டிக் கொண்டு வந்து விட்டுட்டுப் போனார்" என்றான். இன்னும் பயம் நீங்காதவாறு.

இன்னும் வீட்டிற்கு வராத ராஜனை நினைத்து உமாவுக்கு கோபம்தான் அதிகரித்தது. "அம்மா பசிக்குது" என்றான் விக்னேஷ்.

"இதோ சாப்பாடு போடறேண்டா" என்ற போது கதவைத் தட்டும் சப்தம் கேட்க கதவைத் திறந்தாள் உமா.

போதையோடு உள்ளே வந்த ராஜன், விக்னேஷின் கோலத்தை பார்த்து பதறிப் போய் என்னவென்று கேட்க, உடைந்து போய் அழ ஆரம்பித்தாள் உமா.

அவளைத் தேற்றி எல்லாம் விஷயங்களையும் கேட்ட ராஜன். “ஸாரி உமா இனி இப்படி உன்னைத் தவிக்க விட மாட்டேன். இந்தக் குடிப் பழக்கத்தை இன்னியோட விட்டுடறேன். நீ விக்னேஷைத் தேடி எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பாய்? ஸாரி. நான் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்திருந்தால்.. நீ தொடர்பு கொள்ளும் இடத்திலிருந்தாவது நான் உனக்கு உதவி செய்திருக்க முடியும்.ஸாரி உமா. ஐ யாம் வெரி ஸாரி. இனி அலுவலகம் விட்டால் நேராக வீடுதான். என்னை மன்னித்து விடு.”

என்று அவளைத் தட்டிக்கொடுத்தான். பிறகு முதல் உதவி பெட்டியை எடுத்து வந்து


## விசேட திறன்மிக்க வளவாளர்களால் வழங்கப்படும் பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவரா நீங்கள்

| | |
|---|---|
| தலைமைத்துவம் | Leadership |
| முகாமைத்துவம் | Management |
| சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | Marketing management |
| தொழில் முயாற்சியாண்மை | Entrepreneurship |
| நிறுவன முகாமைத்துவம் | Organizational Management |
| திட்டச் சக்கர முகாமை | Project Cycle Management |
| வியாபாரத்திட்ட தயாரிப்பு | Business Plan Development |
| தா்க்கச் சட்ட வரைபு | Logical Framework Development |
| கண்காணிப்பும் மீளாய்வும் | Monitoring and Evaluation |
| பங்கேற்பு கிராமிய கணிப்பீடு மற்றும் தேவை இனம்காணல் | Participatory Rural Appraisal and Need Assessment |
| வசதிபபடுத்துதல் மற்றும் முன்வைப்புத்திறன் | Facilitation and Presentation Skills |
| பயிற்றுவிப்பாளா் பயிற்சி | Training of Trainers |
| வியாபார ஆலோசனை | Business Counseling |

தொடர்புகொள்ளுங்கள்: வியூகம் அபிவிருத்தி ஆலோசனைகள்

(Viuham Development Consultancies) 0771682536



ஒரு பக்க **சிறுகதை**

# சரித்திரா...

ஆரம்ப பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியை பள்ளிப்பருவம்.கல்லூரிப்பருவம். ஆசிரியர் பயிற்சி படிப்பு என சகமாணவியருடன் அரட்டைஅடித்து குதூகலமாக அமைந்த வாழ்க்கை திருமண பந்தத்தால் திசை மாறியது

அறிந்தும் அறியாத புரிந்தும் புரியாத குடும்ப வாழ்க்கை கணவன் வரவால் மகிழ்சியாகவே கழிந்தது புதுமணப்பெண் உறவுகளின் அழைப்பு சுற்றுலா கேளிக்கை நலம் விசாரிப்பு என நகர்ந்த நாட்கள.

விசேசமா என பலரும் கேட்டால் ஆம் என பதில் தரும் நிலையை எட்டியது விரைவில் குவா குவா சத்தம் கேட்கும் நாளும் வந்தது

குழந்தையை பேணி வளர்த்து தலாட்டுப்பாடி ரசிக்கையில் தான் ஆசிரியப்பணிக்கான அழைப்பும் வந்தது குழந்தை பிறந்த நேரம் நல்ல நேரம் என மகிழ..வீட்டில் தாயாரின் மேற்பார்வையில் குழந்தையை விட்டபடி பள்ளி செல்ல நேர்ந்தது

கணவரின் தொழில் மற்றும் செல்வாக்கால் எப்படியோ சொந்த வீடொன்று அமைந்திட வரவுக்கும் செலவுக்குமான வாழ்க்கை பழுதின்றி கழிந்தது

எப்போதும் மகிழ்ச்சியே நிலவுமா என்ன..? காலமும் காலனும் தன் வேலையை காண்பிக்க தொடங்கினர்

வேறேன்ன கொடுத்தவனே (கணவனை) எடுத்துக் கொள்ள தெய்வத்தை நொந்து அழுது புலம்பி வந்த உறவுகள் கூடி பேசி கலைந்து செல்ல தாயின் ஆறுதலில் தனது தன்னம்பிக்கையில் ஏசல் பூசல் கிண்டல் கேலிகளை புறந்தள்ளி தன் குடும்பத்தை காப்பற்ற பள்ளிப்பணியை தொடர்ந்தாள் சரித்திரா...

யார் என்ன சொன்னாலும் ஊர் என்ன சொன்னாலும் நம் குடும்பத்தையும் குழந்தையையும் நாம் தானே காப்பற்ற வேண்டும்

அதுவும் சுய சார்புடன் நினைத்தாலே இனிக்கும் பழைய நினைவுகளும் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு பற்றிய கனவுகளும் பயணிக்க வைக்கின்றன சரித்திராவை.... இருசக்கர வாகனத்தில் ..... எதிர் காலத்தை நோக்கி....

**ந இரவிச்சந்திரன், பழனி, தமிழ்நாடு**




# ஈழத்தில் வெளிவந்த தமிழ் திரைப்படங்கள் ஒரு தேடல்...

**- தமிழ்ப்பாணன் -**

எனது மனதில் அண்மையில் ஒரு சிந்தனை உருவாகியது அதாவது இந்த வெளியீட்டில் ஈழத்தில் வெளிவந்த தமிழ் திரைப்படங்களின் விபரத்தை வெளியிடுவதென்பது. எனது முயற்சிகளை உடனடியாக செயற்படுத்தத் தொடங்கினேன். விபரங்களைத் தேடினேன் முன்னர் இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தான் காண முடிந்தது. ஈழத்தில் தமிழ் திரைப்படங்கள் வெளிவரத்தொடங்கி இத்தனை வருடங்களுக்கு எத்தனை திரைப்படங்கள் இலங்கையில் இருந்து வெளிவந்தது என்றால் ஒவ்வொன்றாக தேடித் தான்பட்டியலிட்டு கண்டு பிடிக்க வேண்டும் போல் உள்ளது. பட்டியல்கள் சில இருப்பினும் அவை முழுமையானதாக இல்லை. பல திரைப்படங்கள் வெளிவந்துவிட்டன ஆனாலும் எத்தனையென்று உடனடியாக சொல்ல முடியாத நிலை உள்ளது. நானும் முயன்று தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை. சமூக வலைத்தளங்கள் ஊடாக விபரங்கள் அனுப்புங்கள் என்று வெளியிட்டேன் விபரம் கிடைக்க வில்லை. ஒரு போட்டியை அறிவித்தேன் ஏமாற்றமே கிடைத்தது. இலங்கைத் தமிழ் திரைத்துறையில் ஈடுபாடுடைய முக்கியஸ்தர்கள் சிலரை அடையாளம் கண்டு அவர்களிடம் நேரடியாகவே குறுஞ் செய்தி அனுப்பி விபரம் கேட்டேன். அதற்கும் சரியாக யாரும் பதில் தர முன்வரவில்லை. ஒரு திரைப்பட செயற்பாட்டாளர், நீர் யார்? உம்மை நம்பி எப்படி விபரங்களை தருவது என்று கேள்வி எழுப்பினார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என்னடா இது வெளிவந்த தமிழ் திரைப்படங்கள் விபரம்தானே கேட்டேன், ஏதாவது சொல்லக் கூடாத விடயம் ஒன்றைப்பற்றியா கேட்டேன். இந்த பதிலில் நான் புரிந்துகொண்டது, திரைப்படங்களின் வெற்றியில் முக்கியமான, தயாரிப்புக்குப் பிந்திய செயற்பாடான சந்தை மேம்படுத்தல் (Marketing Promotion) எனும் முக்கிய செயற் பாட்டை இவர்கள் சரியாக செய்வதன் அவசியத்தை உணராதவர்களாக இருக்கிறார்கள்.

எனது தேடலில் பலர் கண்டும் காணாததும் போல இருந்துவிட்டார்கள். அடுத்தவர்களுடைய படைப்புகளை பற்றி வெளியே தெரியப்படுத்துவதில் இவர்களது ஆர்வம் அப்படித்தான்.

ஒரு சிலர் மட்டும் இந்த விடயத்தின்பொருட்டு ஒரு சில படங்கள் பற்றிய விபரங்களை வழங்கினார்கள். கிளிநொச்சியில் வசிக்கும் கவிஞர் ஜனனி அவர்கள் குறிப்பிடப்படவேண்டியவர். அவர் மட்டுமே இந்த விடயத்தில் அக்கறையெடுத்து பல திரைப்படங்களின் பெயர்களை எனக்கு அனுப்பி உதவி புரிந்தார்.

என்னிடம் இருந்த விபரங்களையும் பின்னர் நான் தேடிப்பெற்றுக்கொண்ட விபரங்களுடனும் இந்த ஆவணப் படுத்தலை ஆரம்பித்தேன். இந்த முயற்சி ஒரு சிறந்த அநுபவமும் படிப்பினையாகவும் இருந்தமையையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

நாங்கள் ஈழத் தமிழ் திரைப்படத் வெளியீடுகளை மூன்று கட்டங்களாக பிரித்து நோக்க முடியும்.

உள்நாட்டு யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதி

யுத்தம் மும்முரமாக இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதி

யுத்தம் முடிவடைந்த பின்னரான காலப்பகுதி

உள்நாட்டு குழப்பங்கள் கலவரங்கள் யுத்தம் என்று 30 ஆண்டுகளுக்கும் மேலான காலம் கடந்துபோயிருந்தது. இந்த யுத்த சூழல் பெரிய அளவில் ஆரம்பமாவதற்கு முன்னர் பல கலைஞர்கள் தமிழ் திரைப்படங்களை வெளியிடுவதில் ஆர்வம் காட்டினார்கள். அவர்களது முயற்சிகளால் பல திரைப்படங்கள் அப்போது வெளிவந்திருந்தன. அவ்வாறு வெளிவந்த திரைப்படங்கள் பற்றி கிடைத்த தகவல்களை முதலில் பார்க்கலாம்


1951 ஆண்டில் குசுமலதா என்ற திரைப்படத்தை பி. ஏ. டபள்யூ. ஜயமான்ன என்பவர் இயக்கி வெளியிட்டிருந்தார். இந்தத் திரைப்படமே இலங்கையயிலிருந்து வெளியான முதல் தமிழ் திரைப்படம் என கருதப்பட்ட போதிலும் அதன் தயாரிப்பு செயற்பாட்டில் பல இந்தியாவில் வைத்து மேற்கொள்ளப்பட்டாதால் முதல் திரைப்படமாக கருத முடியாது என்ற சர்ச்சை படைப்பாளர் மத்தியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. விக்டர் குரேரா என்பவரும் ருக்குமணி தேவி (இவர் நடித்த ஒரே தமிழ் திரைப்படம்) , லெடிசியா பீரிஸ் மற்றம் எடி ஜெயமன்ன ஆகியோர் இத்திரைப்படத்தில் நடித்திருக்கிறார்கள். இந்த திரைப் படத்துக்கான இசையை முகம்மது கவுஸ் என்பவர் வழங்கியிருந்தார். பாடல்களை தென் இந்தியாவை சேர்ந்த ஹனுமந்தராவ் அவர்கள்




எழுதியிருக்கிறார். இது இந்தி யாவிலும் இலங்கையிலும் வெளிவந்த திரைப்படமாக கருதப்படுவதோடு ஒரு சிங்கள நாடகத்தின் கதையை திரைப்படமாக்கி எடுக்கப்பட்டதாகவும் சங்கவுனு பிலித்துற என்ற சிங்கள திரைப்படத்தின் மொழி மாற்றத்திரைப்படம் எனவும் குறிப்பிடப்படுகிறது.

அடுத்து இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ் திரைப்படமாக அநேகரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட படமாக கருதப்படுவது சமுதாயம் என்ற திரைப்படம். இது 1961 ஆம் ஆண்டு வெளிவந்தது. இது 16 மி. மீ. திரைப்படமாகும் இதனை ஹென்றி சந்திரவன்ச என்பவர் தயாரித்து இயக்கியிருந்தார். இந்தத் திரைப்படத்தின் மூலக்கதை அறிஞர் அண்ணாத்துரை எழுதிய வேலைக்காரி என்ற நாவலைத் தழுவி எடுக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்படுகிறது. இந்தப்படத்தின் கதாநாயகனாக எஸ் என். தனரத்தினமும் கதாநாயகியாக ஜெயகௌரியும் எஸ். ஏ. ராஜா என்பவர் வில்லனாகவும், ஆர். காசிநாதன், ஆர். வி. இராசையா, இரத்தின குமாரி, கீதா (இவர் எம். ஆர். இராதாவின் இலங்கை மனைவி) போன்றவர்கள் நடித்திருந்தார்கள். திரு நாவுக்கரசன் திரைக்கதை, வசனம், பாடல்களை எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அடுத்த இதழில் தொடரும்.....)



சிறுகதை – எழுத்தாளர் ரமணி

# ராம், சாம், சலீம்

**நா**ள் முழுதும் சுட்டெரித்து விட்டு, தன் சூட்டைத் தணிக்க, கடலில் மூழ்கினான் கதிரவன்.... மிகவும் களைப்புடன் அறைக்குத் திரும்பினான் ராம். தோளிலிருந்து பையை தரையில் வீசிவிட்டு தரையில் சுவரில் சாய்ந்து அமர்ந்தான் ராம். அரவம் கேட்டு கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த சலீம், கண் விழித்தான்.

" டேய்.... போன காரியம் காயா பழமா..." ராமிடம் கேட்டான் சலீம்.

"வழக்கம் போலத்தான்" இது ராம்.

"சரி.... மத்தியானம் சாப்பிட்டையா, இல்லையா...."

" ம்...."

"பொய் சொல்லாதே டா... இந்தா ... முதல்ல போய் ஏதாவது சாப்பிட்டுட்டு...வா... போ..." கையில் காந்தியைத் திணித்து ராமை அனுப்பினான் சலீம்.

அது ஒரு மேன்ஷனின் அறை. மாத வாடகை ஆயிரம் ரூ. மூன்று பேர் தங்கலாம். அறையில் ஒரேயொரு கட்டில் உண்டு. ஃபேன் என்ற பெயரில் மேலே ஒன்று சுற்றிக் கொண்டிருக்கும். ஜன்னலுக்கு கதவு கிடையாது. அதனால் கடற்காற்று அனுமதியின்றி எட்டிப்பார்க்கும்.... இரவில் தூங்கப் போய்விடும்.... கொசுக்கள் மியூசிக் பிரமாதமாயிருக்கும்.

அதோ பழைய பாட்டை ஜாலியாக விசிலடித்துக் கொண்டு ஜோல்னாப் பையுடன் வருகிறானே அவன்தான் சாம்.

" ஹலோ... எழுத்தாளரே.... என்ன... ரொம்ப குஷி போல....." இது சலீம்.

"இல்லையா பின்னே.... என்னோட எழுத்துக்கும் அங்கீகாரம் கெடைச்சிட்டுது."

"என்னடா சொல்றே...."

"என் கதையை 'மனிதநேயம்' வார இதழுக்கு எடுத்திருக்காங்க... அனேகமாக அடுத்த மூணாவது வார இதழ்ல என் கதை வரும்."

"போடா....போடா.... போக்கத்தவனே, அந்த ஆபீஸ்ல இருந்து நீ வெளியே வரும்போது எதிரே, பழைய பேப்பர் காரன் வந்தானே.... நீ பாக்கலியா"

"பாய், இந்தக் கேலிதானே வேண்டாங்கறது."

"அட... இங்கபாருடா... என்னமோ பெரிய சாகித்ய அகாடமி அவார்டே வாங்கிட்ட மாதிரி.... ஓகே... நான் போய்க் குளிச்சிட்டு கிளம்பறேன்"

ஆமாம், சலீம் மாலையில் குளிக்கும் மைனர்.... குனேகா சென்ட் மணக்க இப்போது வெளியே கிளம்பினால், காலையில் வந்து கட்டிலில் விழுவான். மிக வசதியுடைய பணக்கார வீட்டுப் பையன். சினிமாவில் நடிக்க வேண்டுமென்ற ஆசையில் இங்கு வந்து தங்கி அப்பாவின் காசை கடலில் கரைத்த பெருங்காயம் ஆக்கிக் கொண்டிருக்கிறான். சில திரைப்பட இயக்குனர்கள் ஹோட்டல் ரூம்களில் தங்கி ஸ்டோரி டிஸ்கஷன் என்று தயாரிப்பாளரின் காசைக் கரைப்பதை அறிந்து அவர்களை சந்திக்கப் போவான் சலீம். அப்படிப் போகுமிடத்தில் பல துணை நடிகைகளின் தொடர்பு கிடைத்து, அவர்களிடம் தன்னையும், தன் காசையும் இழந்தான். 'எப்படியாவது', என்றாவது ஒருநாள் வெள்ளித்திரையில் பவனி வருவோம் எனக் கனவு காண்கிறான்.

ராம் சாப்பிட்டுவிட்டு, வந்தான். சாம்

"ஹாய்... ராம்... நான் எழுத்தாளன் ஆயிட்டேன்டா...... "

"அப்படியா, வாழ்த்துக்கள்...." ராம்.

"**ஆ**மாம்.... ஒன் வேலை என்னாச்சு?"

# ராம், சாம், சலீம் தொடர்ச்சி

"அவன் ஏமாத்திட்டாண்டா.... எங்கிட்ட ரொம்ப எதிர் பார்த்தான் போல.... இங்கே காலிப் பெருங்காய டப்பாவுல, மணங்கூட இல்லே.... தெரிஞ்சவுடனே... என்னை விட்டுட்டு, அடுத்த மீனுக்கு தூண்டில் போடப் போயிட்டான். இப்படியும் ஒரு பொழப்பு..."

"இதுதாண்டா உலகம்... அவனுக்கு சாமர்த்தியம் இருக்கு அஞ்சு காசு செலவில்லாம ஒன்ன மாதிரி ஆட்களை மூலதனமாக வச்சு, வியாபாரம் பண்ணரான். நமக்கு அந்தத் திறமையில்லேங்கறதுக்காக, அவங்களை குறை சொல்லப்படாது. நாம் மாட்டிக்காம இருக்கணும். ஆனா அவங்க பொழைப்பு ஒன்னும் நிரந்தரமில்லே. என்னிக்காவது ஒரு நாள் மாட்டிப்பான். ஆனா எத்தனை பேர் மாட்டினாலும் இதேமாதிரி பலர் புற்றீசல் மாதிரி முளைச்சுக்கிட்டேதான் இருக்காங்க. எதையும் நிரந்தரமாத் தடுக்க முடியாது."

ராம் கிராமத்தில் மிக மிக சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். ஒரு தங்கை. அப்பா எழுதப் படிக்கத் தெரியாத தொழிலாளி. வயல்களில் கூலிக்கு உழுது, உரமிட்டு, களைபறித்து, கதிரடித்து, மூட்டை சுமந்து பிழைத்தவர். ராமை நன்கு படிக்க வைத்தார். அவன் கல்லூரியில் பி ஏ படிக்கும்போது, காச நோயால் அப்பா இறந்து போனார். அம்மாவும் வயல் வேலைகள் செய்து ராம் படிப்பை நிறைவு செய்தான். ஏற்கெனவே அப்பாவுக்கு கொடுத்திருந்த உறுதிமொழியின்படி மண்வெட்டி, கடப்பாறையைத் தொடக்கூடாது என்பதில் உறுதியாயிருந்தான். ஆனால் இன்று வேறு வழியில்லை என்று வயல்வேலைக்கு கிளம்பியதை அம்மா தடுத்தாள். சரி.... ஆனால்..? தன் படிப்புக்கேற்ற வேலைக்கு நகரத்திற்கு செல்ல முடிவெடுத்தான். ஆயிற்று, அப்படி இப்படி என்று புரட்டிக் கொண்டுவந்திருந்த காசும் கரைந்து கொண்டே இருந்தது. மாதம் மூன்று முடியப் போகிறது. அவன் வேகாத வெயிலில் ஏறி இறங்காத அலுவலகங்களே இல்லை. நேர்மைக்கு மதிப்பில்லை.

சாம் ஒரு பெரிய எழுத்தாளன் ஆகவேண்டும் என்ற எண்ணத்துடன், கத்தை கத்தையான காகிதங்களுடன் நகருக்கு ரயில் ஏறியவன். பல பத்திரிகை காரியாலயங்களில் தவமிருந்ததில், ஒரேயொரு பத்திரிகை ஆசிரியர் இவன் கொண்டுவந்த காகிதத்தை எடை போடாமல்,கதையை எடைபோட்டார். ஏற்றுக்கொண்டார். இப்போது சாம், வாராவாரம் அந்தப் பத்திரிகையை வாங்கி தன் கதை வந்திருக்கிறதா என பார்க்கத் தொடங்கினான். ஆயிற்று 1.... 2..... 3.... 4.... வாரங்களாயிற்று. இவன் கிணற்றில் போட்ட கல் அசையவே இல்லை. நேரில் போய் விசாரித்தான். "அடுத்தவாரம் பாரு" என்றார்கள். அவன் பார்த்தான். சொன்னதுபோல் அவன் கதை வெளி வந்திருந்தது. வேறொருவர் பெயரில்.! வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் வெகுண்டெழுந்தான். அங்கே போய்க் கேட்டான். இவனது வாதங்கள் அங்கு நிற்கவில்லை. சுவற்றிலெறிந்த பந்து போல் திரும்பி வந்தான். கதறி கதறி அழுதான். தனது கடின உழைப்பில் உருவான அழகிய சிற்பம் ஒரு நொடியில் சின்னா பின்னமாக சிதறி உடைந்ததைப் பொறுக்க முடியவில்லை.

ஒருநாள் இரவு சலீம் ஓர் டி வி சீரியல் நடிகை தேவியிடம் பேசிக் கொண்டிருந்தபோது, அவள் கேட்டாள். "ஏங்க.... இவ்வளவு அழகா, வாட்டசாட்டமா இருக்கீங்க. ஏன் இப்படி நடிப்பு, நடிப்புன்னு சீரழியிறீங்க. எனக்குத் தெரிஞ்ச ஒரு பெரிய எடத்துல உங்களுக்கு நல்ல வேலை வாங்கித் தர்றேன்" என்றாள். "அதெல்லாம் ஒன்னும் வேண்டாம், நீ ஒன் வேலையப்பாரு" என்றவனுக்கு, திடீரென ஒரு பொறி தட்டியது.

"உண்மையிலேயே உன்னால வேலைவாங்கிக் கொடுக்க முடியுமா?" என்று அவளிடம் கேட்டான் சலீம்.

"அதென்ன... அப்படி கேட்டுட்டீங்க... அந்த முதலாளி, எனக்காக எதுவும் செய்வாரு. நீ மட்டும் 'உம்' சொல்லு. அப்புறம் பாரு".என்றாள் அவள். "அப்ப ஒன்னு பண்ணு..... பாவம்.. என்ஃப்ரண்ட் ஒருத்தன் வேலை வேலைன்னு அலைஞ்சிட்டிருக்கான். அவனை அனுப்பறேன். அவனுக்கொரு வேலை வாங்கிக் கொடு... பிளீஸ்...."

"நீ சொன்னா மாட்டேன்னா சொல்லுவேன்... ஓகே அனுப்பு...."

அனுப்பினான் ராமை. ஒரு வாரத்தில் ராமிற்கு ஒரு பிரபல கம்பெனியில் நல்ல வேலை கிடைத்தது. சலீமிற்கு

*சிறுகதை*

## ராம், சாம், சலீம் தொடர்ச்சி

நன்றி சொல்லி தனியாக ஒரு வீடு பார்த்து, தாய் மற்றும் தங்கையுடன் குடித்தனம் போய்விட்டான் ராம்.
அன்றொருநாள் சலீம், ரிஷி என்ற திரைப்பட உதவி இயக்குனரை சந்தித்தான். இருவரும் ஒரு ஹோட்டல் அறையில் 'தாகசாந்தி' செய்து... 3வத ரவுண்ட் டச் பண்ணும் போது, காலிங் பெல் அடித்தது. சலீம் தள்ளாடிப் போய் கதவைத் திறந்தான். தேவி...!

" என்ன ஸ்டோரி டிஸ்கஷனா, நானும் கலந்துக்கலாமா...." கேட்டவாறே ஒரு கிளாசை எடுத்து ஊற்றிக் கொண்டாள். சலீம், "ரிஷி.... இப்படியே இருந்தா சரிப்படாது... ஒரு பய நம்ம சீண்டமாட்டேங்கறான்... ஸோ.... ஒரு பெஸ்ட் ஐடியா வச்சிருக்கேன். இப்ப நான் கேட்டேன்னா எங்கப்பா எவ்வளவு வேணா காசு தருவாரு. நீ ஒரு ஷேர் போடு ரெண்டு பேருமா ஒரு படம் எடுப்போம்..... நான் ஹிரோ.,.. நீ டைரக்டர்.... என்ன சொல்றே...."

தேவி குறுக்கிட்டாள், "நல்ல ஐடியாவா இருக்கே.... எனக்கும் கொஞ்சம் சான்ஸ் தருவீங்களா...?"

"தருவீங்களா வா.... நீதாம்மா ஹிரோயின்."

" நெஜம்மா....?" சலீமை கட்டிப் பிடித்தாள்.

"ரிஷி.... என்ன பேச்சே காணோம்."

" ஓ கே ன்னே வச்சுக்குவோம். ஆனா சரியான கதை ஒன்னும் கெடைக்க மாட்டேங்குதே.... எல்லா பயலுகளும், அரைச்சமாவையே அரைச்சு, அரைச்சு, அது புளிச்சு..... ஊரெல்லாம் ஒரே வாடை..."

"இல்லைடா ரிஷி.... என் ஃப்ரண்ட் சாம்,. ஏ கிளாஸ் கதை வச்சிருக்கான்.... அவனைக் கூப்பிட்டு திரைக்கதை வசனம் எழுதச் சொல்லலாம்..... ஒகேவா.... இப்ப நீ எடத்தை காலி பண்ணு....நான் ரெஸ்ட் எடுக்கணும்"

"ரெஸ்டா...?" சிரித்துக் கொண்டே போனான் ரிஷி.

அடுத்த நாள் ரூமில் சாமிடம், "டேய் சாம் அடிச்சேடா நோபல் பிரைஸு"

"என்னடா..... இன்னும் போதை தெளியலையா.... என்ன உளர்றே"

" போடா.... போக்கத்தவனே.... எவனோ ஏமாத்தி உன் கதையை பிரசுரிச்சுட்டான்னியே, அந்தக் கதையக் கொண்டுவாடா.... இப்ப அதை சினிமாவா எடுக்கப் போறோம்டா.... அந்தப் படம் வெளிவந்தப்புறம், உன்னைக் கையில் பிடிக்க முடியாதுடா. பிரபல திரைக்கதை வசனகர்த்தா ஆயிடுவே......"

சாமிற்குச் சிரிப்பு வந்தது. இவனாவது, படமாவது, எடுப்பதாவது...? ஆனால், நடந்தது வேறு.... சலீம், ரிஷியுடன் சேர்ந்து படம் எடுத்தே தீருவது என தீவிரமாக இறங்கிவிட்டான். நாட்கள், வாரங்களாகி, மாதங்களாகி, வருடமும் ஒன்று முடிந்து விட்டது.

நாளைக்குப் படம் ரிலீஸ்..... சாம் கூட்டத்தோடு கூட்டமா போய் தியேட்டர்ல படத்தைப் பார்த்தான். அவனால் நம்பவே முடியலே. இவனோட தத்துவ வசனங்களுக்கு தியேட்டரே அதிர்ந்தது. படம் முடிஞ்சு வெளியே வரும்போது... ஆஹா.... ஓஹோ .... என்று பாராட்டுக்கள். ஒவ்வொருவரும் சலீமின் நடிப்பையும், ரிஷியின் இயக்கத்தையும் பாராட்டினர். ரூமுக்கு வந்தான்..... சலீம் நின்று கொண்டிருந்தான்.... "எங்கடா போய்த் தொலைஞ்சே..... சரி... சரி.... வா இனிமே நாம இங்கே இருக்க முடியாது. கோடம்பாக்கத்துல தனிவீடு பாத்துட்டேன். வா... போகலாம்"

போனார்கள்.... அன்னிக்கு போ...போ. ... ன்னவங்களெல்லாம்,.. இன்னிக்கு வீட்டுவாசல்ல வெள்ளித்தாம்பாளத்துல வெத்தலை பாக்கோடு 'க்யூ' நிக்கறாங்க.

ஓரிரு வருடத்தில் சலீம் எட்டாத உயரத்தில் போய்விட்டான். சாமும் தேசிய விருது பெற்ற வசனகர்த்தா ஆகிவிட்டான். அதோ பாருங்க.... ராமின் (ஞாபகமிருக்கா) தங்கையின் திருமண வரவேற்பு... பிரபல நடிகர் சலீம் வருகிறார் என பலத்த பாதுகாப்பு.... அதோ.. சலீம். சாம் மற்றும் தேவி வந்து விட்டனர். கண்களில் நீர் பெருக அவர்களை வரவேற்று அழைத்துச் செல்கிறான் ராம்....! ஆஹா, எப்படி இருந்தவர்கள்.... இப்படி...? இதுதான் உலகம்.!




*நாடகத்தின் கரு பற்றிய முகப்பு பத்தி : (உரையாசிரியர் குரலில்)*



எனக்குத் தெரிந்த ஒரு இளைஞி அவள் பெயர் யாஷ்னா. அவள் வேலை செய்த, தகவல் தொடர்பு துறையில் புகழ்பெற்ற நிறுவனத்தில், அவளோடு உடன் வேலை செய்த ஆர்யனுக்கும் யாஷ்னாவுக்கும் இரண்டு வருடங்களாக நல்ல பழக்கம். (பெயர்கள் மாற்றப் பட்டுள்ளன) ஒருவரையொருவர் விரும்பினார்கள். அந்த இளம் பெண் ஒரு நாள் என்னிடம் அவர்களிருவரும் பிரிந்து விட்டதாகக் கூறினாள். என்னை அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். எனக்கு அவள் தாயின் வயது என்றாலும் நான் எழுத்தாளர் என்பதால் மற்றவர்களின் மனநிலையை, குறிப்பாக இன்றைய இளைஞர்களைப் புரிந்து கொள்வேன் என்று நினைப்பதாக அடிக்கடி கூறுவாள். அவர்களின் இறுதி உரையாடலை என்னிடம் பகிர்ந்து கொண்டாள். உங்களுக்கும் அந்த உரையாடலில் நுழைய உள்நுழைவு சீட்டு தருகிறேன். வாருங்கள்:

ஆர்யன்: யாஷ்.. ஹனி.. எப்ப கல்யாணம்னு எங்க அம்மா கேட்டுட்டே இருக்காங்க. உன் முடிவு தான் என்ன?

யஷ்னா: கம்மான் ஆர்யன் திரும்பத் திரும்ப அதே கேள்வியை கேட்டு டார்ச்சர் பண்ணாதடா.. ஐ நீட் டைம்..

ஆர்யன்: வாட் டு யூ மீன் யாஷ்னா? இன்னும் டைம் வேண்டுமா? நம்ம ஏற்கனவே ரெண்டு வருஷமா.. ஐ மீன்.. வி ஆர் டு கெதர்..

யாஷ்னா: ஸோ வாட் ஆர்யன்? இப்ப வரைக்கும் நாம 100% கம்பேட்டிபிளா?, ஐ மீன், ஒத்துமையா இருக்கோமா?

ஆர்யன்: ஆமா. அதுல என்ன சந்தேகம்? என்ன பொறுத்த வரைக்கும் நம்ம ரெண்டு பேரும் ஒரு பர்பெக்ட் கப்புல்..

யாஷ்னா: த்ஸோ.. ஐ டோன்ட் திங்க் ஸோ..

ஆர்யன்: (முகத்தில் குழப்ப ரேகை) யாஷ்.. நீ என்னை ரொம்ப குழப்புற.. நேத்து ராத்திரி கூட என்கிட்ட நீ என்ன சொன்னே? எனக்கு எப்பவுமே இப்படியே உன்னைக் கட்டி புடிச்சுகிட்டு தூங்கணும் போல இருக்குன்னு சொன்னேல்ல?

யாஷ்னா: (தெளிவோடு ) ஆமா சொன்னேன்.. அது.. அந்த டைம்ல அப்படி தோணுச்சு.. ஆனா.. மத்த நேரத்துல நீ பண்ற நிறைய விஷயங்களில் எனக்கு சம்மதம் இல்லை.

ஆர்யன்: (தவிப்புடன்) நீ என்ன சொல்ற? சொல்றதைக் கொஞ்சம் தெளிவா சொல்லு ப்ளீஸ்.. நான் உனக்குத் தெரியாமயோ இல்ல உன்கிட்ட கேட்காமயோ எதையுமே

செய்யறது இல்லையே.. இன்ஃபாக்ட் என்னோட ஃபிரெண்ட்ஸ் கூட பேசுற விஷயங்களைக் கூட நான் உன்கிட்ட ஷேர் பண்ணிக்கிறேனே. நம்ம ரெண்டு பேருக்குள்ளேயும் எந்த சீக்ரெட்டும் இருக்கக் கூடாது என்கிற விஷயத்தில் ஐ அம் வெரி சீரியஸ்.. ஆனா நீ என்ன இப்படி?..

யாஷ்னா: இரு இரு.. இதெல்லாம் நீ செய்யலைன்னு இப்ப யார் சொன்னது?

ஆர்யன்: அப்புறம், நான் செய்த சில விஷயம் பிடிக்கலைன்னு நீ எதை பத்தி சொன்ன?

யாஷ்னா: ஸீ..ஆர்யன்.. எனக்கு இன்னைக்கு நிறைய வேலை இருக்கு. நாளைக்கு காலங்காத்தால ஒரு பிரசன்டேஷன். இன்னைக்கு ஃபுல்லா உக்காந்தா தான் என்னால முடிக்க முடியும். உனக்கு தான் என்னோட பாஸ் பத்தி நல்லா தெரியுமில்ல. ஸோ.. இன்னைக்கு என்ன நிம்மதியா வேலை செய்ய விடு.. வீ ஷால் டாக் ஸம் அதர் டே..

ஆர்யன்: (எரிச்சலுடன் நெற்றியைத் தேய்த்துக்கொண்டு) நோ.. இதான் .. இதான் உன்கிட்ட எனக்கு பிடிக்காது. சண்டேல ஆபீஸ் விஷயம் எதுவும் வீட்ல பேசக்கூடாது, செய்யக்கூடாதுன்னு ஏற்கனவே நம்ம முடிவு பண்ணி இருக்கோம். இருக்கிற இந்த ஒரு நாளும் நீ இப்படி லேப்டாப்பையே கட்டிக்கிட்டு இருந்தேன்னா. நம்மளால எந்த விஷயத்தையும் முடிவு பண்ண முடியாது. அது தவிர இன்னிக்கி சாயந்திரம் நான் அம்மாவை பார்க்க வீட்டுக்கு போகப் போறேன்னு உனக்கு நல்லா தெரியும். போன உடனே அம்மா நிச்சயமா நம்ம கல்யாண விஷயத்தை பற்றிக் கேட்பாங்க. போனதடவை அவங்ககிட்ட அடுத்த வாரம் வரும்போது சொல்றேன்னு டைம் வாங்கிட்டு வந்தேன். அதையும் உன் கிட்ட சொல்லிட்டேன். இந்த வாரம் பூராவும் நீ ஏதாவது பதில் சொல்லுவேன்னு வெயிட் பண்ணுனேன். நீ எதுவுமே சொல்லலை. இன்னைக்கும் நீ இப்படி சொல்றது நல்லா இல்ல யாஷ்னா.

யாஷ்னா: இப்ப புரியுதா. இதான்.. இந்த குணம் தான் எனக்கு உன்கிட்ட பிடிக்காது. எனக்கு ஒரு விஷயம் பற்றி பேச பிடிக்கலைன்னா நீ அது பற்றியே ரொம்ப இன்சிஸ்ட் பண்ணுவ. உங்க அம்மாவுடைய ஃபீலிங்ஸ் தான் உனக்கு ரொம்ப முக்கியம். இவ்வளவு வயசு ஆச்சு இன்னும் உங்க அம்மா புடவையைப் பிடிச்சுட்டு இருக்க ஒரு சின்ன பையன் மாதிரியே பேசுவே. அவங்களுக்கு கல்யாணம், சமையல், குழந்தை பெத்துக்கிறது தவிர பேசுவதற்கு ஒரு விஷயமும் கிடையாது.

ஆர்யன்: ஓ ஷட் அப் யாஷ்னா.. நீ ரொம்ப ஓவரா போற.. எங்க அம்மா பத்தி நீ இந்த மாதிரி பேசுறது எனக்குப் பிடிக்காது. அவங்க கேட்கறதுல என்ன தப்பு இருக்கு? அவங்களுக்கு ரொம்ப சின்ன வயசுதான் எங்க அப்பா காலமான போது .. அவங்க நினைச்சிருந்தா வேற ஒரு கல்யாணம் பண்ணி இருக்கலாம். ஆனா அவங்க எனக்காகவே வாழ்ந்தவங்க. தன்னோட ஆசாபாசங்களை எல்லாம் விட்டுட்டு என்னை வளர்க்கறதை மட்டுமே முழு மனசோட செஞ்சாங்க. அவங்களுக்குன்னு இருக்கிறது நான் ஒரே பையன். எனக்குக் கல்யாணம் பண்ணி பாக்கணும். அவங்க பேரன் பேத்திகளோட வாழணும்னு ஆசைப்படுவது என்ன அவ்வளவு பெரிய தப்பா? அவங்களும் நம்மளுடைய எண்ணத்துக்கு மதிப்பு கொடுத்து ரெண்டு வருஷம் வெயிட் பண்ணிருக்காங்க. இதுக்கு அப்புறமும் அவங்க கல்யாணத்தை பத்திக் கேட்கக்கூடாது என்று நினைக்கிறது நியாயமே இல்லை. உங்க அப்பா அம்மாவுக்கு என்னமோ உன்ன பத்தி அக்கறை இருக்கிற மாதிரியே எனக்கு தோணலை.. ஒரு நாள் கூட நம்ம கிட்ட அவங்க நம்ம கல்யாணத்தைப் பத்தி பேசவே இல்லை. நீங்க பெரிய எலீட் சொசைட்டியா இருக்கலாம்.. ஆனாலும், வயசு வந்த பொண்ணுக்கு கல்யாணம் பண்ணனும்னு கூடவா ஒரு அப்பாம்மா நினைக்க மாட்டாங்க? ( தன் தாயைப் பற்றி அவள் குறைத்து பேசிவிட்ட கோபத்தில் அவனும் வார்த்தைகளை கட்டுப்பாடில்லாமல்

விடுகிறான்).

*மடியில் வைத்திருந்த லேப்டாப்பை தூக்கி கிட்டத்தட்ட எரிவது போல படுக்கையில் வைத்துவிட்டு கோபத்தோடு எழுந்து நின்றாள் யாஷ்னா.*

யாஷ்னா: ஸீ..ஸீ.. இதோ உன்னோட மிடில் கிளாஸ் புத்திய காமிச்சுட்ட பாத்தியா? என்னமோ பெரிய ஓபன் அண்ட் பிராடு மைண்டட்டு மாதிரி அலட்டிப்ப? இப்ப நீ பேசினியே அதுதான் உன்னுடைய ஒரிஜினல் மெண்டலிட்டி. உங்க அப்பா சின்ன வயசுல செத்துப் போனதுக்கு நான் என்ன பண்ண முடியும்? உங்க அம்மாவை நானா ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்க வேண்டான்னு சொன்னே? நீ தான் என் பின்னாடி லோ லோன்னு அலைஞ்சே.. என்னோட பேரண்ட்ஸ் எப்பவோ என்கிட்ட சொன்னாங்க இந்த மிடில் கிளாஸ் பசங்க எல்லாம் இப்படித்தான் இருப்பாங்கன்னு.. நான் தான் முட்டாள்த்தனமா .. நீ குடுத்த சின்ன சின்ன கி ஃப்ட்டை எல்லாம் பெருசா எடுத்துக்கிட்டு.. நீ மிச்சவங்க மாதிரி இருக்க மாட்டேன்னு நினைச்சு உன்னை லவ் பண்ணிட்டேன்.. இப்போ ஏண்டா பண்ணோனும்னு இருக்கு..

ஆர்யன்: (அவன் அடிபட்டப் பார்வை பார்த்தான்) அடிப்பாவி.. நான் ஆசையா வாங்கி கொடுத்த கி ஃப்ட்ஸ் எல்லாம் உனக்கு மட்டமா தெரியுதா.. ஆமாண்டி உங்கள மாதிரி பணக்கார பொண்ணுங்களுக்கெல்லாம் அன்போடு வாங்கி தர பொருள்கள் எல்லாம் மட்டமா தான் தெரியும்.. எங்க அம்மா எத்தனையோ தடவை சொன்னாங்க பணக்கார வீட்டு பொண்ணுங்களுக்கு எல்லாம் மனுஷங்களோட மதிப்பு தெரியாதுடா அப்படின்னு.. எனக்கு தான் அறிவு புல் மேய போய்டுச்சு.

யாஷ்னா: ஆர்யன் மைண்ட் யுவர் டங்க்.. ( இதுநாள் வரையில், டியர், ஹனி, யாஷ் என்று கொஞ்சிக் கொஞ்சி பேசியவன் கொடுமையான வார்த்தைகள் சொன்னதை அவளால் தாங்க முடியவில்லை). தேவையில்லாத விஷயத்தை எல்லாம் பேசாதே. உனக்கு என்ன கேட்கணுமோ ஸ்ட்ரைட்டா கேளு சுத்தி வளைச்சு பேச வேண்டாம்.

ஆர்யன்: (உட்கார்ந்து இருந்த பீன் பேக்கிலிருந்து எழுந்து நின்றான்) ஓகே. நான் நேரடியாவே கேட்கிறேன். நாம ரெண்டு பேரும் மூணு வருஷமா பழகிட்டு இருக்கோம்; முதல் வருஷம் வெறும் ஃபிரண்ட்ஸா தான் இருந்தோம், இரண்டாவது வருஷம் லவ் பண்ண ஆரம்பிச்சோம். மூணாவது வருஷம் முழுக்க லிவிங் டு கெதரில் இருந்திருக்கோம். பத்திரிக்கை அடிச்சு மேளம் கொட்டி மண்டபத்தில் தாலி கட்டலையே தவிர ஹஸ்பண்ட் அண்ட் வைஃப் மாதிரி வாழ்ந்திருக்கோம். நான் இந்த ரிலேஷன்ஷிப்பை வேலிடேட் பண்ண விரும்பறேன். நம்ம ரெண்டு பேரும் முறையா கல்யாணம் பண்ணிக்கிட்டு ஊரறிய குழந்தை குட்டிகளோட வாழணும்னு ஆசைப்படறேன். நீ என்ன சொல்ற?

*(ஒரு சில வினாடிகளுக்கு யாஷ்னா எதுவும் பேசாமல் தலை குனிந்து இரண்டு கைகளையும் தலைக்கு முட்டுக்கொடுத்து கட்டிலின் முனையில் உட்கார்ந்து இருந்தாள். அவள் என்ன பதில் சொல்லப் போகிறாளோ? என்ற டென்ஷனில் விரல் நகங்களை கடித்த படி அவளையே வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தான் ஆர்யன். ஏதோ முடிவுக்கு வந்தது போல தலையை ஒரு முறை உலுக்கிக் கொண்டு, ஷாம்பு கண்டிஷனர் போட்டு மினுமினுவென தொங்கிய குட்டை தேசத்தை வலது கை விரல்களால் நளினமாக பின்னுக்கு தள்ளியபடி ஆரியனை தீர்க்கமாக பார்த்தாள் யாஷ்னா).*

யாஷ்னா: ஓகே ஆரியன். நீ நேரடியா இப்ப கேட்டதை நான் அப்ரிஷியேட் பண்றேன்? எனக்கும் கொஞ்ச நாளாவே ரொம்ப குழப்பமா இருந்துச்சு. நம்ம ரெண்டு பேருக்குள்ள அடிப்படையிலேயே கருத்து வேறுபாடு இருக்கு.

*(ஆர்யன் குறுக்கிட்டு ஏதோ பேச முயல, 'இரு' என்பது போல் கையை ஆட்டி அவனை நிறுத்தினாள்).*

யாஷ்னா: வெயிட் ஆரியன். ப்ளீஸ் என்னைக் கொஞ்சம் பேச விடு. நீ கேள்வி கேட்டிருக்க நான் பதில் சொல்லிட்டுருக்கேன். நான் சொல்லி முடிச்சதுக்கு அப்புறம் நீ சொல்ல வேண்டியதை நீ சொல்லு நான் பொறுமையா கேட்டுக்குறேன். ஓகே?

ஆரியன்: ஓகே. மேல சொல்லு.

யாஷ்னா: ஆர்யன், லுக். என்னைப் பொறுத்த வரைக்கும் 'லவ்' ஒரு உன்னதமான ஃபீலிங். ரொம்ப சந்தோஷமான விஷயம் ஆனால் கல்யாணம் அப்படி இல்லை. கல்யாணம் என்கிறது ஒரு அக்ரீமெண்ட் மாதிரி. நிறைய விதிமுறைகள் கட்டுப்பாடுகள் உள்ள ஒரு கமிட்மெண்ட். ஐ திங்க், நான் அந்த மாதிரியான ஒரு வட்டத்துக்குள்ள வர இன்னும் தயாரா இல்லை. எப்போ தயாராவேன்னு நீ என்னை கேட்டா என்கிட்ட அதுக்கு ரெடிமேடா பதில் இல்லை. ஐ நீட் டைம். என்னுடைய பேமிலி பேக்ரவுண்ட்ல நான் சொல்ற இந்த விஷயத்தை ரொம்ப சாதாரணமா எடுத்துக்குவாங்க. அந்த மனப்பக்குவம் அவங்களுக்கு இருக்கு. ஆனா, உன்னுடைய ஃபேமிலி சைட்ல அப்படியே ஏத்துக்கணும்னு நான் எதிர்பார்க்கலை, கட்டாயப்படுத்தவும் முடியாது. அடுத்தபடியா, எனக்கு குழந்தை பெத்துக்கிறதுல ஈடுபாடு இல்லை. ரொம்ப அவசியமா தேவைன்னா, நான் சரோகேஷன் பத்தி கூட யோசிப்பேன். மறுபடியும் சொல்றேன் என்னுடைய ஃபேமிலி பேக்ரவுண்ட்ல இதையும் சாதாரணமா எடுத்துப்பாங்க. ஆனா, உனக்கும் உன்னுடைய அம்மாவுக்கும் இதெல்லாம் சாதாரணமா இருக்காது என்று நான் நினைக்கிறேன். ஸோ..( சொல்லிவிட்டு அர்த்தத்தோடு அவன் முகத்தை பார்த்தபடி நிறுத்தினாள் யாஷ்னா).

ஆர்யன்: ஸோ.. ( பதட்டமாக கேட்டான்)

யாஷ்னா: ஸோ.. ஐ திங்க் நாம மூவ் ஆன் பண்ண வேண்டிய நேரம் வந்துடுச்சுஆர்யன்..

ஆர்யன்: (அதிர்ச்சியோடு) யாஷ்னா.. அப்படின்னா நீ என்ன லவ் பண்றேன்னு சொன்னதெல்லாம்..

யாஷ்னா: ஆப் கோர்ஸ்.. ஐ லவ் யூ ஆர்யன்.. ஆனா, லவ்வர்ஸா இருக்கிற நாம லைஃப் பார்ட்னஸா ஆக முடியாது.. நம்ம ரெண்டு பேருக்கும் இடையில லவ் பத்தி "பேசிக் கான்பிளிக்ட் ஆஃப் இன்ட்ரஸ்ட்" இருக்குது.. இதுக்கு மேல இதை பத்தி நம்ம டிஸ்கஸ் பண்ணினோம்னா, இதுவரைக்கும் நாம ஒருத்தர் மேல ஒருத்தர் காட்டினா அன்புக்கு அர்த்தம் இல்லாம போயிடும்.. நம்மளுடைய லவ் ரொம்ப மென்மையானது அழகானது.. அது அப்படியே இருக்கட்டும்.. ஒரு நினைவா, அற்புதமான கனவா, வாழ்க்கையில நாம எப்ப நினைச்சு பார்த்தாலும் நம்ம முகத்தில் புன்னகையைக் கொண்டுவர ஒரு விஷயமாக அது இருக்கட்டும். கட்டாயத்துக்காக கல்யாணம் என்ற ஒரு பந்தத்தில் நுழைஞ்சு அந்தக் காதலை கசக்கி பிழிந்து அந்த நாற்றத்தை முகர்ந்து பார்க்க வேண்டாம். ஐ திங்க் நான் சொல்றது உனக்கு புரியும்னு நம்புறேன்.. லெட்ஸ் பார்ட் ஆஸ் ஃப்ரெண்ட்ஸ் வித் நோ ஹார்டு பீலிங்ஸ்..

*அவள் பேசுவதையே விழி கொட்டாமல் பார்த்தபடி நின்றான் ஆர்யன், அவளை விட்டுப் பிரிவது ரொம்பக் கொடுமையானது என்று நினைத்ததும் அவன் விழிகள் கலங்கின. ஆனால், அவள் சொல்வது போல் அவளைக் கல்யாணம் செய்து கொண்டு வாழ்க்கையை நடத்துவது என்பது அதை விடக் கொடுமையாக இருக்கும் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. கலங்கிய கண்களில் உருவான முத்துக்கள் இரண்டு அவனது கன்னத்தில் உருண்டு கீழே விழுந்தன.*

*முற்றும்*



- நயினை அரா..

# கவிதை

# இவர்களல்ல நடிகர்கள்...

மேக்கப்பு போட்டு
மேனியழகிற்கு ஆடைகட்டி
மேடைதனில் ஏறி எடுப்பாய்
கதை வசனம் நன்றாய் அவிட்டு விட்டு நல்ல நடிகரென பேரெடுத்து
நாலுகைதட்டு கிடைத்து பாரட்டுபெற்றவர் நடிகராமோ ?

ஊருக்குளிருந்த கதை உலகிற்கு கொண்டுவந்து
ஆருக்கும் தெரியாத தத்துவத்தை
ஆர்வத்துடன்
சொல்லி வைத்து
பேரரெடுத்த பெருநடிகர் நடிகரல்ல.....

பட்டதுயர் களைய பாதிவழி திசைதிருப்பி
விட்ட குறை நிமிர்த்தி விதி
தன்னை மாற்றுவித்த
உத்தமரும் நடிகரல்ல.....

ஊன் உறக்கம் தான் மறந்து
உண்மைதனை ஒப்புவித்து
ஓயாது தன்னையோர்
கருவியென காண்பித்து
அறமேந்தி வந்து அரங்கேறும்
ஆடலரும் நடிகரல்ல....

ஆருக்கும் புரியவென
ஆக்கிவைத்த கலைவடிவால்
வேருக்குள் இருக்கும் வெறுப்பூட்டும் சிந்தனையை
கூர்ந்திழுத்து கூடித் தெருக் கூத்தாய்
தந்தவரும் நடிகரல்ல....

சின்னத் திரைக்கதையும் சிறுகுறும்பு குறும்படமும்
வண்ணத்திரை
யேற்றி வந்த கலை மேதையரும் நடிகரல்ல......

வெற்றுப்பேச்சின்றி
வெளிப்பூச்சு ஏதுமில்லா
உற்றுப் பார்த்தாலும்
உணரமுடியா உருவத்தில்
உள் வேடம் போட்டாங்கே
அச்சுப் பிழைகாமல் அடுக்கடுக்காய்
கதைபேசி கற்றபுலமையனாய்
கதைவசனம் தானாக்கி
உற்ற உறவினன்போல்
தோளோடு தோள் நின்று
மெல்ல கொட்டும் நாள் வரையும்
தேளாய் மாறியவன் தானேதான்
நல்ல நடிகனப்பா.......



## கவிதை

# குருத்துக்கள் கருகுகிறது...

*பொருண்மியத்து குவியலுக்காய் போட்டியிடும் பேருலகு*
*பேரழிவு கண்டு களித்து தவங்கிடக்க தளிருமிளங்*
*குருத்துக்களா கண்ணுக்குத் தெரிகிறது தான்தோன்றி*
*தனமான வியாபார சிந்தனையின் உலகே நீ*
*உருவாக்கும் புத்தறிவியலில் பங்கெடுக்க யாரிருப்பர் ?*
*ஊதிப்பெருக்கெடுக்கும் பெருநோயும் பேரழிவும்*
*கருசுமந்த தாய்வயிறு பற்றியெரிவதுவும் கண்டா*
*பல்போதை மருந்துகளை சந்தையிலே விரிக்கின்றாய் !*

*அடுத்துவரும் காலங்கள் இளையோரின் முன்னெடுப்பில்*
*ஆக்கும்பல புதுமையென பெற்றவர்கள் விழித்திருக்க*
*தடுக்கின்ற பொழுதனைத்தும் தவிடுபொடியாகியின்று*
*தண்டிக்க துணிந்தாலும் பேரிழப்பை தருகிறதே*
*துடிப்புடனே வளருமிளஞ் சமுதாயம் சாதிக்க பலதிருந்தும்*
*தூயபல சிந்தனையை தொலைத்திங்கு திசைமாற*
*எடுத்துவைத்த காலடியை கருத்தறிந்து தடுத்திடவே*
*எவரினித்தான் முன்வருவர் முயற்சி வீண் என்பாரோ ?*

*வெந்தபுண்ணுள் வேல்பாய்ச்சி நிற்பதுபோல்*
*வேறாக்கி ஓரினத்தின் இளந்துடிப்பை*
*நிந்தித்து நினைத்தவாறு நிதானயமாய் திட்டமிட்டே*
*பிஞ்சுவயசுக்குள் ஐஸாய் ஊட்டும் போதையினை*
*பந்திவிரித்து கஞ்சா அபின் குடு குளுசையென பரிமாறும்*
*கூட்டங்கள் நம்மிடையில் நலமாய் வாழ்வதற்கு*
*இந்த நாட்டினிலே இடமுண்டு இவர்தம்மை நாளும்*
*பெட்டிப்பாம்பாக்கி பெருமகான்கள் வாழ்கிறார் பார்....*

**– நயினை அரா –**



# படிப்பு உயர்த்தும் உன்னை

— ஜெனனி. மோ —

அறியாமை இருளை அகற்றிடும் படிப்பு
அறிவை வளர்த்து ஆற்றலைப் பெருக்கும்
அறிவுக் கண்ணை அகிலத்தில் திறந்து
அறியாத விடயத்தை அறிந்திடச் வைக்கும்

தறிகெட்டுப் போகாமல் திருத்தி எம்மை
அறிவினில் சிறந்து அகிலத்தில் விளங்க
நெறியை வழங்கி நெகிழவும் செய்து
செறிவுடன் வளர செழிப்பை நல்கும் !

படிக்கும் வயதில் படித்திட நீயும்
அடிப்படைக் கல்வியை அழகாய் அமைத்து
துடிப்பாய் செயல்பட்டு தெளிவாய்க் கற்றிட
படிப்பு உன்னைப் பாரினிலே உயர்த்தும்

பாங்குடனே செயல்பட பக்குவமாக கற்றால்
எங்கு சென்றாலும் எல்லோரும் மதிப்பர்
இங்கு கல்வியை இளமையில் கற்றிட
தங்குதடை இன்றி தந்திடும் படிப்பை

அறிஞர் என்றே உலகம் போற்றிட
அறிவை வளர்த்திட ஆசையாக் கற்றிடு
வறுமை தன்னை வாழ்வில் அகற்றிட
பொறுமை கொண்டு பாரில் கற்றிடு

பண்பைக் கொடுத்து பரவசம் தந்தே
மாண்பை உருவாக்கி மகிழச் செய்யும்
கண்ணியம் கொண்டு கல்வியைக் கற்று
விண்ணிலே உயர்ந்து வியந்திடச் செய்

திட்டங்கள் தீட்டி தரணியில் வென்றிட
பட்டங்கள் பெற்று படிப்பால் உயர்ந்திட
சட்டங்கள் கற்று சாதனைகள் செய்திட
ஏட்டுக் கல்வியை எளிதாகக் கற்றிடு

நடிப்புக் கொள்ளாது நயம்படக் கற்றால்
படிப்பு உயர்த்தும் வாழ்வில் உன்னை
படித்து பதவிகள் பெற்று சிறந்திட
பிடித்த வேலையில் பாராள வேண்டும்



# நிறமாற்றம்..

## கவிதை

பச்சையிலிருந்து
பழுப்பு நிறமாகின்றன
மரத்தின் இலைகள்

பச்சையிலிருந்து
பல வண்ணம் ஆகின்றன பட்டாம்பூச்சிகள்

மெலிதான ஊதா
கடுமையாகும்
கத்தரி காயாகுதலில்

கருமையிலிருந்து
வெளிச்சம் பூசுகின்றன
பகல்கள்

விண்மீன்களால்
நிறம் பெயர்கின்றன
அமாவாசை இரவுகள்

இயற்கையில் வண்ணங்கள்
இயல்பான மாற்றங்கள்

ஆனால்

கறுப்பும் காவியும்
பச்சையும் மஞ்சளும்
அணிந்து கொண்டன
மதங்கள்

கடைசியில் இரத்தச்சிவப்பை
கடவுள் பெயர் சொல்லிப் பூசிக்கொண்டன

வாழ்தலின் மாண்பு அழிந்து
தெய்வீகப் பண்பு அகன்று

பகுத்தறிவு தொலைத்து
பச்சோந்திகளாய் மாறிவிட்டன

காலத்திற்கும்
மாறாமல் இருக்க வேண்டிய
மனித மனங்கள்



## கவிதை

# அவள்

அவள் எழுதிய காதல் கவிதைகளில்
இன்று நான் அச்சுப்பிழைகளாய்

அவள் பேசிய வார்த்தைகள்
எனக்குள் சொற்களின் வலிகளாய்

அவளின் காதல் நாடகத்தில்
என் குரல் தினந்தோறும் ஊமையாய்

காதலின் வானவில்லில் நான்
கருப்பு வெள்ளை அடையாளமாய்

காத்திருக்க சொன்னாய்
காணமல் போனாய்

தேடுகிறேன் இருட்டில் எந்தன்
காதல் நிழலை

அவள் பிரிவின் மன அழுத்தம்
எனக்குள் கண்ணீர் அஞ்சலியின்
நினைவுகளாய்

**~ கவிஞர் பிரேம் சுரேஷ் ~**



**நபர் 1:** கிளி ஏன் பச்சையாக இருக்குது..
**நபர் 2:** ?????
**நபர் 1:** அது இன்னும் வேகல அதான் பச்சையாக இருக்குது.. 😁 😁

**நபர் 1:** காக்கா ஏன் கருப்பா இருக்குது..
**நபர் 2:** ??????
**நபர் 1:** அது இன்னும் உஜாலாவுக்கு மாறல அதான் கருப்பா இருக்கு.. 😆 😆

கு. சாந்திகுமார்.

# இனிய மொழிதலில் இணங்கிடு...

**– கவிமணி இரஜகை நிலவன் –**

கனியிருக்க காய்
கவர்தல் முறையோ.!

கனிமொழி பேசுதலில்
இன்பமே சிறையோ?..!

இனிய மொழிதலில்
இதயம் இணங்கிடுதலில்..!

மனிதப் பிறப்புமே
புனிதமாகவே சிறப்புறுமே.!

செந்தமிழில் சிறப்பாக
செழுமையாக இயம்புவோமாக ..!

உச்சங்கள் தேடிட
உழைத்திடுவோம் உயரங்கள் நாடிட.!

மெய்களை கண்டறிவோம்..!
பொய்மைகளை புறக்கணிப்போம்...!

போலிகளை சுட்டெறித்தே
போவோமே உண்மைகள் தேடியே.!

உன்னை நேசிப்பது போல
உன் சகோதரனையும் நேசித்திடு..!

சமமாய் யாவருமிங்கே
சமதளத்தில் வாழ்ந்திடவே.!

சங்கல்பம் கொள்வோம்
சமநிலை காப்போம்.!

நல்லதையே சொல்லிடின்
நலமாய் ஏற்றிடுவோமோ?..!!

# புத்தக வெளியீடு

## கனடா, ரொறன்ரோவில் புத்தக வெளியீட்டு விழா

**– சுலோச்சனா அருண் –**

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தால் சென்ற சனிக்கிழமை ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி தமிழகக் கவிஞர் மு. முருகேஸ் அவர்களால் தொகுக்கப் பெற்ற 'மனதைத் தொட்ட எழுத்தின் பக்கங்கள்' என்ற நூலும், எழுத்தாளர் குரு அரவிந்தனின் 'சாக்லட் பெண்ணும் பண்ணைவீடும்,' 'யாதுமாகி நின்றவள்' என்ற சிறுகதைத் தொகுப்பும், மாலினி அரவிந்தனை இணையாசிரியராகக் கொண்ட 'தமிழ் ஆரம் - 2024' சிறுவர்களுக்கான சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப் பெற்றன. கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் கவிஞர் அகணி சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெற்றோர், ஆசிரியர், மற்றும் தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.



மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து கனடா தேசியப் பண், தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியன செல்வி சோலை இராச்குமார், செல்வி சென்னி இராச்குமார் ஆகியோரால் இசைக்கப்பெற்றன. தொடர்ந்து கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் திரு. அகணி சுரேஸ் அவர்களின் தலைமையுரை இடம் பெற்றது. அவர் தனது உரையில் 'உலகப் புத்தகத் தினத்தைக் கொண்டாடும் இந்த வாரத்தில் எழுத்தாளர் இணையம் இந்த நூல்களை வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சி கொள்வதாகவும், கனடிய எழுத்தாளர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கும் எழுத்தாளர் குரு அரவிந்தனைப் போல ஏனைய எழுத்தாளர்களும் தங்கள் ஆக்கங்களை வெளியிட முன்வரவேண்டும்' என்றும் குறிப்பிட்டார்.

'மனதைத் தொட்ட எழுத்தின் பக்கங்கள்' மற்றும் 'சாக்லட் பெண்ணும் பண்ணைவீடும்' ஆகிய நூல்களுக்கான வெளியீட்டுரையைத் திருமதி சசிகலா ஜீவன்ராம் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது வெளியீட்டுரையில், கவிஞர் மு. முருகேஸ் அவர்களால் தொகுத்து வெளியிடப்பெற்ற இந்த நூலில் இலங்கை, இந்தியா, கனடாவைச் சேர்ந்த 21 பிரபல எழுத்தாளர்களும், பேராசிரியர்களும், திறனாய்வாளர்களும் ஒன்று சேர்ந்து குரு அரவிந்தனின் எழுத்துக்கள் பற்றித் தங்கள் பன்முகப் பார்வையை இந்த நூலில் எழுத்தில் வடித்திருப்பதாகக் குறிப்பிட்டார். மேலும் குரு அரவிந்தனின் சிறுகதைத் தொகுப்பான சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும் பற்றிக் குறிப்பிடும் போது, ஆங்கில மொழி



மாற்றுக் கதைகளையே வாசித்து வந்த எங்களுக்கு முதன் முதலாகக் குரு அரவிந்தன் அவர்கள் நேரடியாகவே தமிழில் தந்திருக்கும் இந்த வெளிநாட்டுக் கதைகள் அற்புதமானவை, அதற்காக அவரைப் பாராட்டுகின்றேன் என்று குறிப்பிட்டார்.

அடுத்து கனடா எழுத்தாளர் இணையத்தின் பொருளாளரும், எழுத்தாளருமான கனகசபை ரவீந்திரநாதன் ‘யாதுமாகி நின்றவள்’ என்ற சிறுகதைத் தொகுப்புக்கான வெளியீட்டுரையை நிகழ்த்தினார். சங்க இலக்கியப் பாடல் வரிகளை எடுத்து நவீன கதைகளை உருவாக்கியிருப்பது ஆச்சரியப்பட வைப்பதாகவும், அதே நேரத்தில் கொரோனா காலத்துக் கதைகள் அந்த இழப்பை நினைத்து அழவைப்பதாகவும் குறிப்பிட்டார்.



அடுத்து தமிழ் ஆரம் - 2024 சிறப்பு மலர் பற்றி வெளியீட்டரை நிகழ்த்திய இளைய தலைமுறையினரான செல்வி. அர்ச்சயா வீரபத்திர ஐயர் தனது உரையில் சிறுவர்களுக்கும், இளைய தலைமுறையினருக்குமான இது போன்ற தமிழ் சார்ந்த இதழ்கள் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என்பதைக் குறிப்பிட்டுப் பெற்றோர் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு இதற்கு மிகவும் அவசியமனது என்பதையும் குறிப்பிட்டார்.

# துளிப்பாக்கள் - நரேஸ் -

*தேயிலைக் கூடைகள்*
*நிரம்பி வழிகிறது*
*தொழிலாளர் கண்ணீர்*

*வயலில் நெற்கதிர்கள்*
*தலை சாய்த்து காத்திருக்கும்*
*கூலிகோரும் தொழிலாளி*

*மண்சுமந்த மக்கள்*
*வரிசையாக காத்திருக்கிறார்கள்*
*தோட்ட வாசல்களில்*

*ஏழையின் கண்கள்*
*ஆனந்தக்கண்ணீர் சொரிகிறது*
*ஆழ்ந்த உறக்கத்தில்*

*ஏழைத் தொழிலாளி*
*மகிழ்ச்சியால் முத்தமிடுகிறான்*
*மழைத்துளிகளுக்கு*

*கூவி விற்கும் தொழிலாளி*
*பேரம் பேசுகிறார்*
*மொத்த விற்பனையாளர்*

# சிலோன் தியேட்டர்ஸ் லிமிட்டட் நிறுவனத்தை ஆரம்பித்தவர்

- தமிழ்ப்பாணன் -

முன்னொரு காலத்தில் மிகவும் பிரபல்யமாக இலங்கை தமிழ் சினிமாத் துறையின் வளர்ச்சியில் மிக முக்கியமான பங்களிப்பு செய்தவராக பேசப்பட்ட ஒருவர் தான் சேர். சிற்றம்பலம் ஆபிரகாம் கார்டினல்.

இலங்கையின் வட மாகாணத்தில் அமைந்திருக்கும் யாழ் தீபகற்பத்தின் அச்சுவேலி என்ற பிரதேசத்தில் பிறந்தவர்தான் இந்த சிற்றம்பலம் ஆபிரகாம் கார்டினல். சாமுவேல் வைரமுத்து கார்டினல் இவரது தந்தை. இவருடைய தாயார் சலோமாபிள்ளை பஸ்தியாம்பிள்ளை. 1899ஆம் ஆண்டு இவரது அகவை தினம்.

இவருடைய ஆரம்பக்கல்லூரி யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியல் ஆரம்பித்ததாயினும் பின்னர் கொழும்பு சென்று அங்கே சென். ஜோசப் கல்லூரியில் தனது உயர் கல்வியைத் தொடர்ந்தார். இலத்தீன் மொழியில் இவரது தறின் மேலீட்டார் அதில் தேர்ச்சிபெற்றதோடு அந்தப் பாடசாலையிலேயே இலத்தின் மொழியை கற்பிக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. பின்னர் சட்டக்கல்வியை பயின்று பட்டம்பெற்றவர்.



சேர் சிற்றம்பலம் கார்டினல் மிகவும் முக்கியமாக இலங்கை சினிமாத் துறை வளர்ச்சிக்கு வித்திட்டவர்களுள் ஒருவராக பேசப்பட்டவராக விளங்கினார். அதற்கு காரணம் அவர் இலங்கைத் திரைப்படத் துறையின் வளர்ச்சிக்கு வழங்கிய சில முக்கியமான பங்களிப்புகளே என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. தனது சட்டக்கல்வியை முடித்துக் கொண்ட பின்னர் திரைப்படத்துறைக்குள் காலடி எடுத்து வைத்தார். குறிப்பிட்ட காலம் திரைத்துறையின் வளர்ச்சியில் தனது பங்களிப்பை வழங்கினார்.

இலங்கையில் திரைப்படத் துறையின் முன்னோடியாகத் திகழ்ந்தவர். இவர்தான் **"சிலோன் தியேட்டர்ஸ் லிமிட்டட்"** எனும் நிறுவனத்தை 1928 செப்டெம்பர் 29இல் ஆரம்பித்தவர். இந்த நிறுவனம் தற்போதும் இலங்கையில் முன்னணியில் உள்ள ஒரு நிறுவனம் ஆகும். சேர் சிற்றம்பலம் கார்டினல்தான் தான் இலங்கையில் 2வது சிங்கள மொழித் திரைப்படமாகிய **"அசோகமாலா"** என்ற திரைப்படத்தை 1947இல் தயாரித்தார். **'சிலோன் ஸ்ருடியோஸ்'** என்ற கலைக்கூடத்தையும் இவர் நிறுவி நடாத்தி வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

பிரித்தானிய அரசால் வழங்கப்படும் மிகவும் பிரசித்திபெற்றதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான சேர் பட்டத்தை 1951இல் பிரித்தானிய அரசு வழங்க பெற்றுக்கொண்டார் இதன் மூலமாக சேர்பட்டம் பெற்ற சேர் முத்துக்குமாரசுவாமி, சேர் பொன். இராமநாதன், சேர் பொன் அருணாச்சலம், சேர் இரத்தினசோதி சரவணமுத்து போன்ற இலங்கையர்களுள் இவரும் ஒருவராகினார்.

ஈழத்தின் தமிழ் திரைப்படங்கள் தயாரிப்பு பணியானது ஏறத்தாழ 60 வருடங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்பது நம்மில் பலர் அறிந்த விடயமே. அன்று முதல் இன்றுவரை பல்வேற படைப்பாளர்களால் பல்வேறு படைப்புகள் வெளியிடப்பட்டுள்ளமையும் நாம் அறிந்ததே. இந்த படைப்புகளை வெளிக்கொணர்வதில் படைப்பாளர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டே அவற்றை உருவாக்கி வெளியீடு செய்கின்றனர். திரைப்படத் தயாரிப்பு என்பது கட்டுரைகளை அல்லது கதைகளை எழுதி அச்சுப்பதிப்பு செய்து வெளியிடுவது போன்று ஓரிரு படிமுறைகளில் பூரணப்படுத்தப்படுபவையல்ல. அவற்றை உருவாக்குவதில் பல்வேறு படிமுறைகளை படைப்பாளர்கள் தாண்ட வேண்டி இருக்கிறது.

முதலில் திரைப்படம் ஒன்றை உருவாக்கி வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தில் தொடங்கும் பணி அதற்கான சிறந்த கதைக்கருவொன்றை அடையாளம் காணுதல், அந்த கதைக்கருவை மையப்படுத்தியதாக கதையை உருவாக்குதல், அதனை பின்னர் திரைக்கதைக்கு மாற்றுதல் போன்ற இந்த ஆரம்பப் படிமுறைகளுக்கே நீண்ட நாட்களை செலவிடவேண்டியிருக்கிறது. அதற்கடுத்தாற்போர் முதலீட்டாளர்களை தேடிக் கண்டுபிடித்து அவர்களை இசைபடவைத்து படத்தை ஆரம்பித்து முடிப்பதற்கிடையில் மேலும் பல படிமுறைகளைத்தாண்டுவதோடு பல சவால்களையும் முகம் கொடுக்கவேண்டியிருக்கிறது. இவையெல்லாம் வெளியிலிருந்து பார்க்கும் பார்வையாளர்கள் இலகுவாக புரிந்துகொள்ளக்கூடிய விடயமல்ல.




அத்தனை படிமுறைகளையும் தாண்டி ஒரு படைப்பை தயாரித்து வெளியிட்டால் அதற்காக செலவிடப்பட்ட முதலில் குறிப்பிட்ட தொகையைத்தானும் பெறமுடியாத இக்கட்டான தோல்வி நிலையை பல படைப்புகள் சந்தித்து விடுகின்றன. இவ்வாறான தோல்விகள் படைப்பாளர்களை மீளவும் தலை தூக்கமுடியாத நிலைக்கும் கொண்டு சேர்த்துவிடுகின்றன். அப்படியான நிலைமையிருந்தும் பலர் துணிவுடன் அடுத்தடுத்த படைப்புகளை உருவாக்கும் முயற்சியில் துணிகரமாக ஈடுபடுவதை நாம் எம் கண்முன்னே காணக்கூடியதாக இருக்கின்றது. சில திரைப்படங்கள் படைப்பின் தரத்தின் பொருட்டு மக்கள் மனதைத்தொட்டு வெற்றிபெற்ற படமாக இருந்தாலும் வர்த்தக ரீதியில் வெற்றி பெறாமல்போனதும் உண்டு.

இப்பேற்பட்ட ஒரு நிலைமையில் ஈழத்தின் தமிழ் சினிமாத்துறை இருப்பதற்கு காரணம் என்ன என்பதை படைப்பாளர்களோ, ஆர்வலர்களோ, முதலீட்டாளர்களோ தேடிப்பார்த்து சரியான காரணங்களை கண்டறிந்தார்களா என்றால் அநேகமாக இல்லை என்பதே எனது கருத்து. நானும் இந்தக் கட்டுரையில் சரியான காரணங்களை பல்வேறு தரப்பினரிடம் இருந்து கேட்டறிந்து வெளியிடலாம், அவர்கள் மிகச்சரியான கருத்துகளை தேடிக்கண்டறிந்து வழங்குவார்கள் என்று எதிர்பாத்து பல்வேறு வகையில் முயற்சிகளை மேற்கொண்டேன். ஆயினும் எனது முயற்சிகள் நான் எதிர்பார்த்தளவு பயனளிக்கவில்லை என்றே கூறலாம். திரைப்படத்துறையில் இருப்பவர்களில் அநேகமானவர்கள் பதில்தருவதற்கு முன்வரவில்லை. பதில் தந்த சிலரும் தாங்கள் ஏற்கனவே தீர்மானித்து தொடர்ச்சியாக குறிப்பிட்டு வருகின்ற காரணங்களைத்தான் திரும்பத் திரும்ப கூறுகின்றார்களே தவிர அதற்கு அப்பால் சென்று தேடுவதற்கோ, தேடிச்சரியான காரணங்களை கண்டுபிடித்து தாங்கள் கொண்டிருக்கும் காரணங்களை மாற்றுவதற்கோ அல்லது அவற்றோடு கண்டுபிடித்த புதிய காரணங்களை சேர்த்துக்கொள்வதற்கோ அல்லது ஏனையவர்களின் கருத்துகளுக்கு செவிமடுப்பதற்கோ தயாராக இல்லை.

இவர்களது கருத்துகளுக்குள் மிக முக்கியமான கருத்தாக அநேகமானவர்களால் முன்வைக்கப்பட்ட ஒரு கருத்துத்தான் **‘தரமான படைப்புகளை தயாரித்து வெளியிட்டால் கட்டாயமாக ஈழத்து தமிழ் திரைப்படங்கள் வர்த்தக ரீதியில் வெற்றிபெறும்”** என்பது. நான் இந்தக் கருத்துடன் உடன்பட்டாலும் அண்மைக் காலங்களில் வெளிவந்த தரமான பல படைப்புகள்கூட வர்த்தக ரீதியில் வெற்றி பெறவில்லையே அப்படியென்றால் அதற்கு காரணமென்ன. இது நிறையவே அலசி ஆராயவேண்டிய ஒரு பிரச்சனை.

> **‘தரமான படைப்புகளை தயாரித்து வெளியீட்டால் கட்டாயமாக ஈழத்து தமிழ் திரைப்படங்கள் வர்த்தக ரீதியில் வெற்றி பெறும்’**
> - ரமணன் -

ஈழத்தில் தமிழ் சினிமா படங்களை எடுத்து வெளியிடும் படைப்பாளர்களும் வெளியீட்டாளர்களும் எத்தனை நாளைக்குத்தான் எடுத்து வெளியிட்டு வெளியிட்டு தங்கள் சொந்த பணத்தை அல்லது இன்னொரு முதலீட்டாளரின் பணத்தை இழந்துகொண்டிருக்க முடியும். சமூக மாற்றத்திற்காக, தங்களுடைய நீண்ட கால கனவை நனவாக்க, தாம் கண்ட பிரச்சனைககளை மட்டும் படைப்புகளுக்கூடாக வெளிக்கொணர, எமது மக்களின் வாழ்வியலை வெளிக்கொணர என்று ஒரு சில படங்களை மட்டும் வெளியிட்டு தங்கள் முதலீட்டை இழக்கலாம் ஆனால் தொடர்ச்சியாக அதனை செய்ய முடியுமா? ஆகவே கட்டாயமாக எமது நாட்டின் தமிழ் சினிமா படங்கள் வர்த்தக ரீதியில் வெற்றி பெறும் படங்களாக உருவாக சாத்தியமான காரணங்களை தேடி அவற்றை வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. வெறுமனே எமது படைப்புகள் தரமான படைப்புகளாக வெளிவந்தால் வெற்றி பெறும் என்று கூறிவிட்டு நகர்ந்து செல்ல முடியாது.

நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல இந்த நிலைமைக்கான காரணங்களை கண்டறிவதற்கான முயற்சியில் இறங்கியபோது அதற்கான போதுமான பதில்கள் எனக்கு கிடைக்கவில்லை. பலர் எனது முயற்சிக்கு தங்களுடைய சாதகமான சமிக்ஞையை காண்பிக்கவில்லை, பலர் கண்டும் காணாததுபோல் விட்டுவிட்டார்கள், பதிலிறுத்தவர்களின்

பதில்களும் தீர்வை காண்பதற்கான அல்லது பிரச்சனைகளை அடையாளம் காண்பதற்கான பதில்களாக அமைய வில்லை.


பதிலிறுத்தவர்களில் அநேகமானவர்களின் பதிலாக எனக்கு தெரியப்படுத்தப்பட்ட பதில்களில் தேடலுக்கான கேள்விக்கு பொருத்தமாக வழங்கப்பட்ட பதில்களை இங்கு தருகிறேன். அவற்றையும் படைப்பாளர்கள் எதிர் காலத்தில் தமிழ் திரைப்படங்களை ஈழத்தில் தயாரிப்பதற்கு முன்னர் தங்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு திரைப்படத்தயாரிப்பில் ஈடுபடுகின்றபோது அவர்களது திரைப்படங்களை வெற்றிப் படங்களாக அமைத்துக் கொள்வதற்கு சில வேளைகளில் உதவியாக அமையக்கூடும். சிலருடைய கருத்துகள் இந்த பிரச்சனைக்கு தீர்வைப் பெற்றுத் தரக்கூடிய பொருத்தமான பதில்களாக அமையாதமையால் அவற்றை இங்கு தவிர்த்திருக்கிறேன்.

1. சரியான கதைக்கரு இல்லாமை
2. சிறந்த ஒளிப்பதிவு இல்லாமை
3. திரைக்கதை வசனம் சரியான முறையில் எழுதப்படுவதில்லை
4. கதைகளில் ஆச்சரியங்கள் திருப்பங்களை சரியான இடத்தில் சரியான முறையில் உட்படுத்துவதில் போதுமான நுட்பங்கள் கதை மற்றும் திரைக்கதை எழுதுபவர்களுக்கு போதாமல் இருப்பதும் அதுபற்றிய அறிவை வளர்த்துக்கொள்ளாமையும்.
5. திரைப்பட எடிட்டிங் சிறப்பாக செய்யக்கூடிய திறன் இல்லாமையும் படங்களில் எடிட்டிங் சிறப்பாக செய்யப்படாமையும்.
6. ஒளிப்பதிவில் ஈடுபடுபவர்களின் திறன் போதாமையும் ஒளிப்பதிவு தரமாக மேற்கொள்ளப்படுவதில் உள்ள பிரச்சனைகளும்.
7. முதலீட்டாளர்களுக்கு முதலிடுவதில் பயம்
8. திரைப்படத்தில் பேசப்படும் மொழி மக்கள் விரும்புவதாக இல்லை அல்லது அவர்கள் பார்த்துப் பழக்கப்பட்ட திரைப்படங்களின் மொழியையொத்ததாக இல்லை
9. தொழில் நுட்பத் திறன் குறைபாடுகள்
10. நடிகர்கள் தேர்வு சரியாக மேற்கொள்ளப்படாமையும் அவர்களின் நடிப்பாற்றல் சிறப்பானதாக அமையாதமையும்
11. ஒப்பனைகளில் தேர்வு பெற்றவர்களை அடையாளம் கண்டு அவர்களை பயன்படுத்தாமை அல்லது ஒப்பனை மேற்கொள்பவர்களுக்கு ஒப்பனை சார்பான பூரணமான அறிவு இல்லாமை.
12. நடன அமைப்புகளை பொருத்தமான முறையிலும். சிறப்பான முறையிலும் மேற்கொள்ளும் அனுபவம் போதாதவர்கள் அதற்கு பயன்படுத்தப்படுவது.
13. கலை இயக்குனர்களின் அனுபவக்குறைபாடு சிறந்த காட்சியமைப்புக்கான ஒழுங்குபடுத்துவதில் குறைபாடுகளை உருவாக்குகின்றமை.
14. படைப்புகள் தரமானவைகளாக மக்கள் இரசனைக்கு உகந்தவையாக அமையாமை
15. இலங்கைத் தமிழ் திரைப்படங்களில் இந்திய திரைப்படங்களுக்கு அமைவான ஒலிப்திவு சாதனங்கள் பயன்படுத்தப்படுவதில் உள்ள குறைபாடும் இது பற்றிய போதுமான பயிற்சிகளைப் பெற்றவர்களை இதற்கு பயன்படுத்தாமையும்.

போன்ற மேற்படி கருத்துக்கள் பலவேறு முயற்சிகளுக்கூடாக என்னால் கண்டறியப்பட்ட கருத்துகள். ஏனை யவர்களுடைய கருத்துகள் தவிர்த்து எனது மனதிலும் உதித்த சில முக்கியமான விடயங்களையும் இங்கு உங்களுடன் பகிர்ந்துகொளளலாம் என நினைக்கிறேன்.

* ஈழத்து தமிழ் சினிமாவை பார்க்கும் மக்கள் தொகை இங்கு மிகக் குறைவாகவே உள்ளது.
* தயாரிக்கப்படும் திரைப்படங்களின் தரத்தில் இன்னமும் குறைபாடுகள் இருக்கின்றன.
* சினிமாத்துறையில் ஈடுபடும் வெவ்வேறு துறைகளைச் சாந்தவர்களின் (நடிகர்கள், இயக்குனர்கள், ஒப்பனையாளர்கள், கமரா இயகக்குனர்கள், ஒளியமைப்பாளர்கள், ஒலிப்பதிவாளர்கள், கலை இயக்குனர்கள், நடன இயக்குனர்கள், நடனமாடுபவர்கள், திரைப்பட எடிட்டர்கள், கதாசிரியர்கள், திரைக்கதை எழுதுபவர்கள், வசனகர்த்தாக்கள் போன்றவர்கள்) போன்றவர்களின் அந்தந்த துறைசார் அறிவு, திறன் மற்றும் அனுபவம் குறைவாகவே இருக்கிறது.
* திரைப்படங்களில் பயன்படுத்தப்படும் மொழி நடையில் மக்கள் விருப்பத்துக்கு மாறான குறைபாடுகள் இருக்கின்றன.
* சந்தை விரிவாக்கம் பற்றிய விளக்கமும் அதன் தேவை பற்றிய ஆய்வுத்திறனும் இங்கு மிகவும் குறைபாடாக இருக்கிறது..
* புதிய வெளியீட்டுத் தளங்களின் வெளியீட்டுக்கான கிடைப்பனவு ஈழத்துப் படைப்புகளுக்கு இல்லாமல் அல்லது மிகக்குறைவாக இருப்பதும் அதுபற்றிய தெளிவு படைப்பாளர்களுக்கு போதுமானதாக இல்லாமல் இருப்பதும், இந்தக் குறைபாட்டை நீக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு யாரும் முன்வராதைமையும், புதிய வெளியீட்டுத் தள உருவாக்கத்திற்கான முயற்சியில் யாரும் ஈடுபடுவதில் முனைப்புக்காட்டாதமையும் இன்னொரு காரணமாக பார்க்கலாம்.

(அடுத்த இதழில் தொடரும்)






**- குரு அரவிந்தன் -**

**(முக்கிய பாத்திரங்கள் தாய், இரண்டு பிள்ளைகள், கணவன், மற்றும் முகாமில் உள்ள சிலர்)**

**(தாய்க்கும் குழந்தைக்குமான உணர்வை இருவரின் முகபாவத்திலும் காட்டவேண்டும்.)**

அந்தப் பச்சிளம் உதடுகள் மார்பில் பட்டபோது தாய்மையின் பூரிப்பில் அவள் மெய்மறந்து போனாள். குழந்தையை மார்போடு இறுக அணைத்துக் கொண்டு கண்களை மெதுவாக மூடிக்கொண்டாலும் தாய்மையின் அந்த இதமான உணர்வின் வெளிப்பாட்டை அதிக நேரம் அவளால் அனுபவிக்க முடியவில்லை. பூப்போன்ற சின்னஞ் சிறிய அந்த உதடுகளின் தேடலில் அங்கே சுரப்பதற்கு எதுவுமில்லை என்று தெரிந்த போது குழந்தையின் ‘வீல்’ என்ற அந்த அலறல் சத்தம்தான் அவளது செவிகளில் முட்டி மோதி நின்றது.

வெறுமையின் தாக்கம் ஏற்படுத்திய குழந்தையின் ஆக்ரோசத்தவிப்பை அவளால் அப்போதுதான் முழுமையாக உணரமுடிந்தது. அதுவே அவளது உணர்வுகளின் பிரவாகமாய் ஒருகணம் அவளை உடைந்து போகவும் வைத்தது. அடுத்த கணமே அந்த உணர்வின் தாக்கம் ஏற்படுத்திய இயலாமையின் வெளிப்பாடாய் அந்தத் தாய் மனசு ஓவென்று விம்மி வெடித்தது. பொட்டென்று மார்பில் விழுந்து வழிந்த கண்ணீர் துளிகள் முகம் புதைத்து அழுத குழந்தையின் உதட்டில் படிந்த போது வாய்விட்டு வெளியே சொல்லத் தெரியாத அந்தப் பிஞ்சின் அலறல் கூட ஒரு கணம் தேங்கி நின்றது.

‘அம்மா ஊட்டிய அமுதம் உப்புக் கரித்தது ஏன்?’ என்று அந்தக் குழந்தைக்குப் புரிந்திருக்க நியாயமில்லை.

குழந்தையைச் சமாதானம் செய்ய வாய் திறந்து ‘ஆராரோ’ என்று மெல்லிய குரலில் தாலாட்டுப் பாடியவள் வெளியே கனத்த சப்பாத்துக் காலடிச் சத்தம் கேட்டதும் சட்டென்று நிறுத்திக் கொண்டாள். தாலாட்டுப் பாடக்கூட முடியாத சூழ்நிலைக் கைதியாய் அவள் மாறியிருந்தாள். வாய்திறந்தால் வெளியே உதிர்வது தமிழாக இருந்ததால்தான் அவள் இந்த மண்ணில் இப்படியான அவலநிலைக்குத் தள்ளப்பட்டாள் என்பது அவளுக்குத் தெரியும். ஆனாலும் அது பற்றிச் சிந்திக்க இதுவல்ல நேரம் என்பதால் அது பற்றிய கவலைகளை தற்காலிகமாக அவள் ஒரு புறம் தள்ளி வைத்திருந்தாள்.

**இலங்கையில் நடந்த யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில், வன்னிப் பொறியில் அகப்பட்ட அப்பாவித் தமிழ்மக்கள் பட்ட அவலத்தை எடுத்துச் சொல்லும் குறும்படக்கதை, இந்தக் கதையைப் படமாக்க விரும்புபவர்கள் ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும். – kurufanclub@gmail.com**

பசி கண்ணை இருட்டிக் காதை அடைத்தது. இப்படியான பசிக்கொடுமையை அவள் ஒரு போதும் அனுபவித்ததில்லை. கொடுமையிலும் கொடுமை பசிக்கொடுமை அதுவும் குழந்தைகள் பரிதவிப்பதைப் பார்த்தபோது தூக்கம் கெட்ட இரவாய் எப்போது விடியும் என்ற எதிர்பார்ப்புடையதாய் அந்த இரவு அவளுக்கு அமைந்திருந்தது. கடைசிக் குழந்தை வயிற்றில் இருக்கும் போதே அவளது கணவன் தொலைந்து போயிருந்தான். உயிரோடு இருக்கிறானா இல்லையா என்பதுகூடத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் நாடு இருந்தது. அதனால் குழந்தைகளின் பசியைப் போக்க யாரிடமாவது கையேந்த வேண்டிய நிலைக்கு அவள் தள்ளப்பட்டிருந்தாள்.

**(பிளாஸ்பாக்கில் கணவன் குழந்தைக்குப் பால்மா வாங்கப் போவதும், சந்தேகத்தின் பெயரில் இராணுவம் அவனைக் கைது செய்து கொண்டு போவதையும் காட்டலாம்)**

அகதியாய் சொந்த மண்ணிலே புலம் பெயர்ந்து இங்கே வந்தபோது படித்திருந்தும் வயிற்றுப் பிழைப்புக்காக அரிசி ஆலை ஒன்றில் கூலி வேலைதான் அவள் செய்தாள்.

இலங்கைத் தீவில் பெரும்பான்மை இனமக்கள் மட்டும் சந்தோசமாய்க் காலம் களிக்க வடக்கு கிழக்கு மலைநாடுகளில் வாழ்ந்த சிறுபான்மை இனமான தமிழர்கள் மட்டுமே அரசியல் லாபம் தேடியவர்களால் தினந்தினம் அல்லற்படுத்தப்பட்டு அழுதழுதே வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அடிப்படை உரிமைகளை

வாய்திறந்து கேட்டதுதான் அவர்கள் செய்த மிகப்பெரிய குற்றமாகக் கணிக்கப்பட்டது.

அகிம்சை முறையில் போராடிய தமிழ் அரசியல் வாதிகள் அதனால் பலன் எதுவும் இல்லாமல் போகவே தாமாகவே ஒதுங்கிப் போய்விட இளைஞர்கள் அந்தப் போராட்டத்தை முன் எடுத்தார்கள். அரசியல் வாதிகள் யாருமே தமிழர்களின் குறைகள் என்ன என்பதை அறிந்து கொள்ளவோ அல்லது அதன் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவோ மறுத்து விட்டார்கள். அடங்கிப்போ என்ற கர்வத்தோடு அடக்கி ஆள்வதையே ஜனநாயகம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஆண்டாண்டு காலமாய் வாழ்ந்த பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு பிரிந்து போவது என்பது அத்தனை இலகுவான காரியமாய் தமிழர்களுக்கு இருக்கவில்லை. அதில் உள்ள வேதனையும் வலியும் மற்றவர்களுக்கு இலகுவில் புரிவதுமில்லை. திடீரென அவர்கள் வாழ்ந்த இடத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்று அறிவிப்பு வந்த போது இவர்கள் செய்வதறியாது குழம்பிப் போனார்கள். பாதுகாப்பு வலையம் என்று சொல்லி அவர்கள் ஏற்படுத்திய தடுப்பு முகாமுக்குள் போய் இவர்கள் முடங்க வேண்டிவந்தது. திறந்த வெளிச் சிறைச்சாலையில் இருப்பவர்களுக்கு ஒதுங்க ஒரு மரநிழலும் குடிக்கத் தண்ணீரும் ஒருநேரம் அரை வயிறுக்கு ஏதாவது தின்னக் கொடுத்தால் போதும் என்ற நினைப்புத்தான் அரசியல்வாதிகளுக்கு இருந்தது. இதுதான் மனிதவாழ்க்கை என்றால் அடிமை வாழ்க்கை வாழ்வதற்கு ஜனநாயகம் என்ற போர்வை எதற்கு என்பது பாதிக்கப்பட்ட இவர்களின் வினாவாக இருந்தது.

பாதுகாப்புக் கருதி பாதுகாப்பு முகாமுக்குச் சென்ற இளம் பெண்கள் களவாடப் படுகிறார்கள் ஆண்கள் தொலைந்து போகிறார்கள் குழந்தைகளும் சிறுவர்களும் தனிமைப் படுத்தப் படுகிறார்கள் என்றெல்லாம் இவள் தங்கியிருந்த பகுதியில் தினமும் ஒவ்வொரு கதையாகச் சொல்லப்பட்டன.

**(அங்கே அவ்வப்போது என்ன நடந்தன என்பதை உரையாடல் மூலம் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ள வேண்டும்.)**

வன்னிப்பகுதிக்குச் சென்றால் உயிருக்கு ஆபத்து தொலைந்துகூடப் போகலாம் என்று சொல்லி பத்திரிகையாளர்கள் தடுக்கப்பட்டதால் எல்லாச் செய்திகளும் வேண்டும் என்றே முடக்கப் பட்டுவிட்டன. யார் தவறு செய்தாலும் தவறுதான் என்பதை வெளியே சொல்ல நல்ல மனம் படைத்த மனிதாபிமானிகள் கூடப் பயப்பட்டார்கள். அப்படிச் சொல்ல வந்த ஒருசில பத்திரிகை ஆசிரியர்கள் முகவரி இல்லாமற் போனதும் கூட இவர்கள் பயப்படுவதற்கான முக்கிய காரணமாய் இருக்கலாம்.

தூக்கம் கலைந்த நிலையில் பசிக் கொடுமையை எப்படிப் போக்கலாம் என்று எண்ணியபோது அவள் முன்பு கூலி வேலை செய்த அரிசி குத்தும் ஆலையின் நினைவு வந்தது. சுமார் இரண்டு மைல் தூரத்திற்கப்பால் அந்த ஆலை இருந்தது. எட்டி நடந்தால் விரைவாக ஒருநடை போய் வரலாம் என்று நினைத்தாள். குழந்தைகள் இருவரும் இன்னமும் தூங்கினபடியே இருந்தன. இரவிரவாய் அழுததில் ஏற்பட்ட பசிக் களைப்பாக இருக்கலாம்.

குழந்தைகள் எழுந்திருக்கு முன்பாக வந்து விடலாம் என்ற நம்பிக்கையோடு சுளகையும் (முறம்) எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாய்ச் சென்றாள். முதலாளியிடம் கேட்டுப்பார்க்கலாம் என்ற நம்பிக்கையோடு சென்றவளுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. தொழில் இல்லாத காரணத்தால் அரிசி ஆலை இழுத்து மூடப்பட்டிருந்தது. மூடப்பட்டுப் பல நாட்களாகி இருக்கலாம். கட்டிடத்தின் வெளிப்பகுதியில் அள்ளிக் குவிக்கப்பட்ட உமிக்குவியல் மட்டும் இவள் கண்களில் பட்டது. அவசரமாக கொஞ்ச உமியைக் கிளறிச் சுளகில் எடுத்துப் போட்டுக் கைகளால் பரப்பிப் பார்த்தாள். ஏதோ ஒருவித நம்பிக்கையின் பிடிப்பு அவளது கண்களில் பளீச்சென்று தெரிந்தது.

ஒவ்வொரு முறையும் உமியை அள்ளிப் போட்டுப் புடைக்கும் போது அவள் தேடிவந்தது கிடைக்கிறதா என்று ஆவலோடு தேடிப்பார்த்தாள். சப்பி நெற்கள்தான் அதிகமாக அகப்பட்டாலும் அவற்றைத் தவிர்த்துப் பார்த்த போது நாலைந்து நல்ல நெல்லுப் பருக்கைகளும் அவளது கையில் ஒவ்வொரு முறையும் அகப்பட்டன. அரை மணி நேரம் செலவிட்டதில் ஒரு சிறங்கை நல்ல நெற்கள் கிடைத்தன. கஞ்சி காய்ச்சிக் குழந்தைகளுக்குக் குடிக்கவாவது கொஞ்ச அரிசி கிடைத்தால் போதும் என்ற வெறியோடு அவள் துரிதமாகச் செயற்பட்டாள்.

எந்த நேரமும் வானத்தில் குண்டு வீச்சு விமானத்தின் இரைச்சல் கேட்கலாம். திக்குத் திசை தெரியாமல் செல்கூட அங்கே வந்து விழலாம். எதையுமே கணித்துச் சொல்லமுடியாத நிலையில் மயான சூழ்நிலையில் அந்தப் பிரதேசம் இருந்தது. பறவைகளின் கூடுகள்கூடக் கலைக்கப்பட்டதில் அவற்றின் ஓசை அடங்கிப் போயிருந்தது. எரிந்துபோன மரங்களும் குடிசைகளும் மனித உடல்களும் ஆங்காங்கே தினமும் காணும் காட்சியாப் போய்விட்டது.

வியர்வையில் தோய்ந்த உடம்பு பிசுபிசுத்தது. அவ்வப்போது சேலைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு நெல்மணிகளைப் பொறுக்கி எடுத்தாள். வெய்யிலையும் பொருட்படுத்தாது, ஐந்தாறு சிறங்கை நெல்மணிகளை கவனமாக எடுத்துப் பொன்னைப்போல மடியில் சேகரித்திருந்தாள். அதைக் கொண்டு போய் மெல்ல நெரித்து அரிசிப் பருக்கைகளாக்கி அவற்றைப் பொறுக்கிக் குழந்தைகளுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வழியிலே நின்ற சண்டி மரத்து இலைகள் சிலவற்றையும் அவசரமாகப் பறித்துக் கொண்டு அவள் தங்கியிருந்த இடம் நோக்கி விறுவிறு என்று நடந்தாள். என்றோ ஒருநாள் உதயம் தோன்றும் குழந்தைகளை நன்றாய்ப் படிக்கவைத்து அவர்களை நல்ல பிரசைகள் ஆக்க வேண்டும் என்ற ஒரு தாயின் தீராத கனவுகளைச் சுமந்தவண்ணம் அவள் நம்பிக்கையோடு நடந்தாள்.

அடிப்படைத் தேவைக்கான உணவுப் பொருட்கள் இந்தியாவில் இருந்து கப்பலில் வருவதாகச் சொன்னார்களே தவிர அங்கே எதுவும் வந்து சேரவில்லை. வன்னிப் பகுதியில் போர் உக்கிரமடைந்திருந்தது. ஒருநேர உணவிற்காகக் காத்திருந்து காத்திருந்து ஏமாற்றம் தாங்கமுடியாமற் போனதில் அவளுக்குள் ஒருவித சோர்வும் சலிப்பும்

குடிகொண்டது. இராணுவம் நன்கு திட்டமிட்டு உரிமைக்காகப் போராடியவர்களைப் பட்டினி போட்டால் அதைக் கைவிட்டு உணவுக்காகப் போராடுவார்கள் என்ற வஞ்சக நோக்கத்தோடு செயற்பட்டுக் கொண்டிருந்தது. அவர்களின் வஞ்சக வலையில் வீழ்ந்ததால் உரிமையை மறந்து உணவிற்காகப் போராட வேண்டிய நிலைக்கு அந்த அப்பாவி மக்கள் தள்ளப்பட்டார்கள். அதனால்தான் இன்று இப்படியான மனித அவலத்தை அவர்கள் எதிர் நோக்க வேண்டிவந்தது.

சண்டி மரத்து இலையோடு சேர்த்துக் கஞ்சி காய்ச்சிக் குழந்தைகளுக்குக் கொடுத்து தானும் மிகுதியை அருந்தியதில் சற்றுத் தென்பாக இருப்பது போலத் தெரிந்தது. நம்பிக்கைகள் உடைந்துபோன தருணத்தில் அதுவே அவர்கள் உயிர்வாழ வழிகாட்டுவதாயும் இருந்தது.

சுற்றுவட்டாரப் பகுதிகளில் அவ்வப்போது, செல் வெடிக்கும் சத்தம் பயத்தை ஏற்படுத்தியது. வாழ்வா சாவா என்ற நிலையில் அங்கிருந்த குடும்பங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பதற்றத்தோடு நாட்களைக் கடத்த வேண்டியிருந்தது.

மறுநாள் காலையில் மீண்டும் எதிர்பார்ப்போடு அவள் அரிசி ஆலை நோக்கி நடந்தாள். அரிசி ஆலைக்கு அருகே சென்றபோது அவளது எண்ணத்தில் இடி விழுந்தது போல அங்கே கண்ட காட்சி இருந்தது. எரி குண்டுகள் பல அங்கே வந்து விழுந்து வெடித்ததில் அந்த நெல் குத்தும் ஆலையும் அதன் பின்பக்கத்தில் குவிக்கப்பட்டிருந்த உமி மேடும் சாம்பலாய்ப் போயிருந்தன. சில நாட்களாவது உயிர் வாழலாம் என்ற அவளது கடைசி நம்பிக்கையும் கண்முன்னால் சாம்பலாகிப் போயிருந்தது.

குழந்தைகள் பசியால் மீண்டும் வாடப்போகிறதே என்ற கவலையில் ஏமாற்றத்தோடு தங்கி இருந்த இடம் நோக்கி வேகமாகத் திரும்பியவளுக்கு இன்னும் அதிர்ச்சி காத்திருந்துது. இவள் தங்கியிருந்த பகுதியில் இருந்து வந்த ஒப்பாரி ஓசை தூரத்தில் வரும்போதே இவள் செவிகளைத் தொட்டு உறைய வைப்பதாய் இருந்தது. என்னவோ ஏதோ என்ற பதட்டத்தோடு ஓட்டமும் நடையுமாய் வந்தாள். இரத்தம் உறைந்த அவளது குழந்தைகளின் ஆடைகள்தான் அங்காங்கே சிதறிக் கிடந்தன. சிதறல்களைப் பார்த்த வினாடியே அதைத் தாங்க முடியாத அதிர்ச்சியில் அவள் அப்படியே உணர்வற்று விழுந்து போனாள். குழந்தைகளுக்காக உணவு தேடி அலையும் ஒரு அபலைத்தாயின் அலைச்சலைக்கூடப் பொறுக்க முடியாத ஆண்டவன் அவளுக்குக் கருணை செய்ய நினைத்திருக்கலாம். அதனால்தான் அவளைக் கேட்காமலே அவளது குழந்தைகளைத் தன்னிடம் தத்து எடுத்துக் கொண்டிருக்கலாம். விதியே விதியே என்செய்தாய் என்று விதிமீது பழிபோட்டு எல்லோரும் கண்மூடி மௌனம் காக்க,

அவளைப்போல பல பெண்கள் அந்த மண்ணில் சிறைப்பிடிக்கப்பட்டு முகாமில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட ஆடை களையும் துச்சாதன மிருகங்களுக்கு மத்தியில் துணையற்ற அவளும் தனிமரமாய்… வலியும் வேதனையும் சுமந்த கண்கள் குளமாக வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் எதையுமே வெளியே சொல்ல முடியாத ஊமைகளாய்… முடிவு தெரியாத பயணமாய்…. இன்னும் எவ்வளவு காலம்?

**(கடைசிக் காட்சிதான் படத்தின் வெற்றியை முடிவு செய்வதால், எப்படி இருக்க வேண்டும் என்பதை நெறியாள்கை செய்பவர் முடிவெடுத்துத் தனது திறமையை வெளிப்படுத்த வேண்டும்)**

தொலைந்தவர்களைத் தேடி அலைந்த உறவுகளும் ஒவ்வொருவராக இவ்வுலகை விட்டுப் பிரிந்து போவது, சாட்சியங்களின் அழிப்புக்கு இயற்கையும் உதவியாக இருப்பதை யாரும் கண்டுகொள்ளவில்லை.




- சாந்திகுமார் -

'இரவி' சஞ்சிகை

மென் மேலும் வளர்ச்சிபெற்று

காலகாலத்துக்கும்

சிறப்பான படைப்புகளை தாங்கி வெளிவந்து

வாசகர்களை மகிழ்விக்க வேண்டுமென

உளமார வாழ்த்துகிறோம்.......

